பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 11 ஞாயிற்றுக்கிழமை (28.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 332

# இலங்கைக்கு இந்தியாவின் வான் பாதுகாப்பு ஆயுதங்கள்!

## கொந்தளிப்பான நிலை கருதி வழங்கப்பட்டதாக புதிய இராணுவத் தளபதி தீபக் தகவல்



புதுடில்லி,ஒக்ரோபர்28

இந்தியா இலங்கைக்கு வான் பாதுகாப்பு ஆயுதங்களை வழங்கி உள்ளது. இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே அந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

இந்தியாவின் புதிய இராணுவத் தளபதி ஜெனரல் தீபக் கபூர் இத்தகவலை நேற்றுத் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இலங்கையின் தற்போதைய மிகவும் 'கொந்தளிப்பான' நிலையைக் கருத்திற்கொண்டே அந்த நாட்டுக்கு வான் பாதுகாப்பு ஆயுதங்கள் வழங்கப்பட்டன -

அந்த நாடு தனக்கு ஆயுத உதவி வழங்குமாறு பல தடவைகள் எமக்கு வேண்டுகோள் விடுத்து வந்தது. அங்குள்ள தற்போதைய அமைதியற்ற குழப்பமுற்ற நிலையைக் கருத்திற்கொண்டு வான் பாதுகாப்பு ஆயுதங்களைக் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. - என்றும் ஜெனரல் தீபக் கபூர் விளக்கினார்.

இந்தியாவின் புதிய இராணுவத் தளபதியாக ஜெனரல் தீபக் கபூர் இம்மாதம் முதலாம் திகதி பதவியேற்றிருந்தார். அதன் பின்னர் அவர் முதல் தடவையாக நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அவரது நீண்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தள விஸ்தரிப்புப் பணிகளின் போது விடுதலைப் புலிகள் ஊடுருவி வேவுபார்த்தனரா?

### விசாரணைக் குழுவுக்கு எழுந்துள்ள சந்தேகம் இது

கொழும்பு,ஒக்.28

அநுராதபுரம் விமானத்தளத்தின் விஸ்தரிப்புப் பணி நடந்தவேளை, விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஒப்பந்தக் காரருடன் ஊடுருவி தளத்தை நோட்டமிட்டிருக்கலாம் என விசாரணையாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

விமானத்தளத்தில் உள்ள ஓடுபாதையை விஸ்தரிப்பதற்கான பணிகள் அண்மையில் இடம்பெற்றன இந்தப் பணி வெளி ஒப்பந்தக்காரர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தக்காரருடன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் விமானத் தளத்துக்குள் ஊடுருவி தகவல்களை சேகரித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் குழு இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருகின்றது என்றுதெரிவிக்கப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## புங்கன்குளம் வீதியில் கிளைமோர்த் தாக்குதல்!

கொழும்பு,ஒக்.28

யாழ்.நகருக்கு சமீபமாக புங்கன்குளம் வீதி ஓரப்பகுதியில் படையினரின் ஜீப்பை இலக்குவைத்து நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

படையினருக்கு உணவு எடுத்துச் சென்ற வாகனத்தை இலக்குவைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது எனினும் படையினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

## இந்திய ராடர் சமிக்ஞை காட்டிய போதிலும் புலிகளின் விமானங்களை இடைமறிக்கவில்லை!

### தவறு எங்கே என்று விசாரணை

கொழும்பு,ஒக்.28

வவுனியா விமானத் தளத்தில் இந்தியா வழங்கிய ராடர்கள் பொருத்தப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் விமானங்கள் அந்த வான் வழியாக பறந்தபோது ராடர் கருவியில் தக்க நேரத்தில் சமிக்ஞை வெளியிட்டு எச்சரித்தன.

எனினும் அதனை அவதானித்து விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலை விமானப் படையினரால் தவிர்க்க முடியவில்லை .

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா தேவாலயப் பகுதியை சமாதான வலயமாக்க கோரிக்கை

கொழும்பு,ஒக்.28

மடுமாதா தேவாலயப் பகுதியை சமாதான வலயமாக பிரகடனப்படுத்துமாறு ஆயர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு பேராயர் அதிவண. ஒஸ்வால்ட் தோமஸ் தலைமையில் மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசெப் மடு தேவாலய நிர்வாகி வண. எமிலியாஸ் பிள்ளை ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீராவியடி, கந்தர்மடம் பகுதிகளில் வெள்ளி இரவு பல வீடுகளில் கொள்ளை!

### காரும் சூறையாடிச் செல்லப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ்.நீராவியடி, அன்னசத்திர ஒழுங்கை மற்றும் கந்தர்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆறு வீடுகளுக்குள் நேற்றுமுன்தினம் முன்னிரவு புகுந்த கொள்ளையர்கள் சுமார் 15 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர். கார் ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்ற அவர்கள் அது விபத்துக்குள்ளானதால் நீராவியடியில் கைவிட்டு சென்றுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய நீதிமன்ற வளாகத்தில் நாளை வழக்கு விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீதிமன்ற வளாகத்தில் சகல நீதிமன்றங்களும் நாளைமுதல் இயங்கவுள்ளன.

சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்.மேல் நீதிமன்றம், யாழ். மாவட்ட நீதிமன்றம், யாழ்.நீதிவான் நீதிமன்றம் ஆகியன ஒரே இடத்தில் இந்த வளாகத்தில் இயங்கும்.

இந்த நீதிமன்றங்களை இயக்குவதற்கு வசதியாக தளபாடங்கள் மற்றும் ஆவணங்கள் நேற்று புதிய வளாகத்துக்கு எடுத்து வரப்பட்டன.

யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த வாரம் ஒத்திவைக்கப்பட்ட வழக்குகளின் புதிய திகதிகள் பதிவாளரால் அறிவிக்கப் பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தென்மராட்சியில் மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த 27 மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி கலைமன்றத்தில் நடைபெறவுள்ள லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநரின் வரவேற்பு நிகழ்வில் கௌரவிப்பு இடம்பெறும்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் வலயம் 15இன் தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக 306பி 1 மாவட்ட ஆளுநர் லயன் செ.இராகவ்ன் கலந்து கொள்வார்.

சாவகச்சேரி கோப்பாய்,தென்மராட்சி கிழக்கு ஆகிய லயன்ஸ் கழகங்கள் இணைந்து இந்நிகழ்வினை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (1-207)

## சேவைநலன் பாராட்டு விழா



திருமதி
பாக்கியலீலா நவரத்தினம்
(ஆசிரியரும், பகுதித் தலைவரும்)

| சேவை விவரங்கள் | காலம் தொடக்கம் | வரை |
| --- | --- | --- |
| இ/ ஒப்பாவத்த இல3 தோ.த.க.பாடசாலை | 01.03.66 | 26.06.77 |
| இ/ ஒப்பாவத்த இல3 அ.த.க.பாடசாலை | 27.06.77 | 08.01.78 |
| யா/ ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் | 09.01.78 | 31.12.79 |
| இ/ பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயம் | 01.01.80 | 14.02.82 |
| வ/ நெளுக்குளம் அ.த.க. வித்தியாலயம் | 15.02.82 | 28.02.82 |
| வ/ புதுக்குளம் க.உ. வித்தியாலயம் | 01.03.82 | 30.04.84 |
| வ/ நெளுக்குளம் அ.த.க. வித்தியாலயம் | 01.05.84 | 14.03.85 |
| யா/ கச்சாய் அ.த.க. வித்தியாலயம் | 15.03.85 | 31.01.06 |
| யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலை | 01.02.06 | 27.10.07 |

இன்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை சேவையிலிருந்து ஒய்வு பெற்றுச் செல்லும் எமது ஆசிரியரின் ஒய்வுக்காலம் மேலும் சிறப்புப் பெற வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலை. (67379)


மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

பழைய, புதிய திரைப்படப்பாடல்
Audio CDs'
MP3 CDs'
VCDs'

பழைய, புதிய
தமிழ், ஆங்கில
திரைப்பட VCDs' DVDs'

மற்றும்
Computer Software,
Computer Games
CDs' DVDs'
கைக்கடிகாரங்கள், கணனி உதிரிப்பாகங்கள்

எதிர்பாராத கவர்ச்சிகரமான விலைக் கழிவில்

அல்டி எலக்ரோனிக்ஸ்
இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## 15ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
27
★
10
★
1927



மறைவு
14
★
10
★
2007

திருமதி இரத்தினம் சரஸ்வதி

கடந்த 14.10.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயின் 15ஆம் நாளில் அவரின் ஆத்ம சாந்தியை வேண்டி உருக்கமாக நினைவு கூருகிறோம்.

S.ரஜனி (கனடா),
ஆர்.சௌந்தர்ராணி (கலா)
(சம்பந்தன் மெடிக்கல் கிளினிக்), (யாழ்.மத்திய கல்லூரி பற்சிகிச்சை நிலையம்),
குடும்பத்தினர்.

174/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (67375)

# நாளை அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இவ்வருட தமிழ்த்தினப் போட்டி தொடர்பான கலந்துரையாடல் இதில் இடம்பெறும்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக செப்ரெம்பர் மாதம் வரையிலான முன்னேற்ற அறிக்கையினையும் இதன்போது கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

# இன்றைய நிகழ்வுகள்

குடத்தனை, ஒக்.28

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக் கிழமை 'உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. இந்த சொற்பொழிவினை வட இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி அ.கனகரத்தினம் நிகழ்த்தவுள்ளார். (203-78)

* * *

நவாலி,ஒக்.28

ஆனைக்கோட்டை சிறுவர் பாதுகாப்பு குழுவின் பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் அதன் தலைவர் வை.சந்திரராசா தலைமையில் பாதுகாப்பு குழு அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார். (203-100)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.28

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அடுத்தவருடம் (2008) தரம் 11 வகுப்புகளுக்கு கணிதபாடம் கற்பிக்க விருக்கும் ஆசிரியர்களையும், இவ்வருடம் தரம் 9 வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களையும், செயலமர்வுக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

அத்துடன் தரம் 6 தொடக்கம் 11 வரை விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செய்முறை செயற்பாட்டுப் பட்டறை இன்று காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது. (203-207)

* * *

அச்சுவேலி,ஒக்.28

யாழ். மாவட்ட சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ் போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் பல்துறைசார் மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும்.

பல்துறைசார் இலவச மருத்துவ முகாமில் மகப்பேற்றியல், தோல்நோய், சத்திர சிகிச்சை மருத்துவம், பெண் நோயியல், குழந்தை மருத்துவம், சலரோகம் ஆகியன உட்பட அனைத்துத் துறையிலும் சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஆய்வுகூட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இலவச மருத்துவமுகாம் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறவிருப்பதால் பயன்பெறுமாறு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.விமலேந்திரன் அறிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

யாழ்.நகர மையப் பகுதியில், பிரதீபா கணேஸ் என்பவருடைய தே.அடையாள அட்டை (846593730V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (67376)


ICT Paper Class - R.Kumaran -B.Sc.
பிரிவு I ஆரம்பம்:03.11.2007 சனிக்கிழமை 11.30am
Model Paper மற்றும் எதிர்பார்க்கை வினாக்கள்.
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
T.P 0776577359 (67362)

விசேட மலிவு விற்பனை
தரம் - 7, தரம் - 11 மாணவர்களுக்குமான பாட பயிற்சி நூல்கள் 50 % கழிவில் விற்பனை செய்யப்படுகின்றன.
இருப்பு உள்ளவரை மட்டுமே
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
No. 234, K.K.S றோட், யாழ்ப்பாணம்


# மகாஜனவில் நாளை பரிசளிப்பும், நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஒக். 28

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஜயரத்தினம் நினைவு தினப் பரிசளிப்பு விழாவும் "மகாஜனன்" வெளியீடும் நாளை திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக்கழக வணிகபீட விரிவுரையாளர் ஸ்கந்தவரதா ரமேஸ் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி மலரை ஆய்வுரை செய்வார். (1)


நீங்களும் விண்ணப்பிக்கலாம்
உளசமூக சேவையாளர் யோக சிகிச்சையாளர்
ஒரே நேரத்தில் கற்கக்கூடிய
உடல் உள ஆரோக்கியத்திற்கான யோகக்கலை
சான்றிதழ் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில்...
● உளசமூகப் பயிற்சி (Psychosocial Training)
● உடல் உளநலத்திற்கான யோகப் பயிற்சியில்....
* IRT, QRT, DRT, YRT, YMT மற்றும் SMET
* சுவாசப் பயிற்சிகள் - 22 * பவர் யோகா
* தியான வகை * திராடகா போன்ற விஷேட பயிற்சிகள்.
இரண்டு அம்சங்களும் உள்ளடங்கிய இந்த இரு மாதப் பயிற்சி நெறி பெங்களூர் யோக வளாக பாடத்திட்டமாகும்.
ஆண், பெண் இருபாலரும் பங்கு பெறலாம். ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கவும்.
மேலதிக விவரங்களுக்கு:
மாவட்ட இணைப்பாளர்,
விழி உளசமூக மேம்பாட்டு அமையம்,
35, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 9115
Email: vizhips@yahoo.com (67373)


## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும் யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் உபதலைவருமான

சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்

அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர், பணியாளர்கள்,
வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,
நீர்வேலி.

## மரண அறிவித்தல்கள்



### கந்தசாமி நித்தியானந்தன்

(பிரபல தவில் வித்துவான்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான கந்தசாமி நித்தியானந்தன் 18.10.2007 அன்று காலமானார்.

அன்னார் காஞ்சனாகுமாரியின் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி - கோகிலாம்பாள் தம்பதியரின் மகனும் பிரசன்னா, பிரதீபன், பிரகாஷ், பிரசாந்தன், ரமேஸ் ஆகியோரின் தந்தையும், கிருஷ்ண மூர்த்தியின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.10.2007) திங்கட் கிழமை கனடாவில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
(கந்தசாமி கோவிலடி), இணுவில்.

தகவல்
குடும்பத்தினர்.

### ஏகாம்பரம் வேதாரணியம் (பாலசிங்கம்)

(ஒய்வு பெற்ற தபாலதிபர்)



நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியில் வசித்தவருமாகிய ஏ.வேதாரணியம் நேற்று (27.10.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் - தெய்வானை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் சுதாராணி (பதவி நிலை உத்தியோகத்தர், மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகக் கிளை), சுஜீவன் (நியூசிலாந்து), சுயாத்தா (லண்டன்), கோவர்த்தனன் (யாழ்.இந்து மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சபேசன் (விரிவுரையாளர், கணனித்துறை, யாழ். பல்கலைக்கழகம்), துளசிகா (நியூசிலாந்து), அருட்செல்வம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மகுலசிங்கத்தின் அன்புச் சகோதரரும் சஞ்சயன், யஸ்வந், ஹர்ணி, சுருதி, சரணா, ஷரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11/1,தாளையடி லேன்,
திருநெல்வேலி
தொ.பே.: 222 7358 (67372)

தகவல்:
திருமதி சுதாராணி சபேசன்
(மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மீதான விமானக் குண்டு வீச்சுகளுக்கு புலிகளின் பதிலடியே அநுராதபுரத் தாக்குதல்

கிழக்கு மாகாணத்தை விடுவித்து விட்டோம், விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை அழித்து விட்டோம், விடுதலைப் புலிகளை வன்னிக்குள் முடக்கி விட்டோம், வடக்கு - கிழக்கிற்கு வெளியில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை நிறுத்தி விட்டோம் என்ற சிறிலங்கா அரசின் பிரசாரங்களை 21 கரும்புலிகளும், இரட்டை இயந்திரங்களை கொண்ட இரு வானூர்திகளும் ஒரு இரவினில் மாற்றிவிட்டன.

மிகவும் பாதுகாப்பான அநுராதபுரம் விமானப் படைத்தளத்தின் மீது கடந்த திங்கட்கிழமை அதிகாலை மிகவும் அதிர்ச்சிகரமான தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தியிருந்தனர். கொமோண்டோத் தாக்குதல் பாணியில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

வான் படைத்தளத்தை 7 மணிநேரம் விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன், தளத்தில் இருந்த 80 வீதமான வான் கலங்களையும் அழித்துள்ளனர். இதில்பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான 'பீச்கிராப்' (Beach Craft) கண்காணிப்பு விமானமும் அடங்கும்.


விமானப் படைத்தளத்துக்குள் நுழைவதற்காக கரும்புலிகள் இரும்பு வேலியை வெட்டிய பகுதி படத்தில் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

வட களமுனையில் அநுராதபுர தளமேபிரதான பங்கை ஆற்றி வந்தது. அநுராதபுரம் நகரில் இருந்து 4 கி.மீ. தொலைவில் நுவரேவேவா குளத்திற்கு அருகில் விமானத் தளம் அமைந்துள்ளது. வட போர்முனையின் வழங்கல்களில் இத்தளம் பிரதான பங்கை வகித்து வருகின்றது. சிறிலங்காவில் உள்ள மிகவும் பலப்படுத்தப்பட்ட தளங்களில் இதுவும் ஒன்று.

இலங்கை விமானப் படையின் பிரதான பயிற்சிக் கல்லூரி அங்கு அமைந்துள்ளது. 9ஆவது தாக்குதல் உலங்குவானூர்தி பிரிவு (ஸ்குவாட்றன்), 6ஆவது உலங்குவானூர்தி பிரிவு, 1ஆவது பயிற்சி வானூர்திப் பிரிவு, 7ஆவது உலங்குவானூர்திப் பிரிவு, 11 ஆவது ஆளில்லாத உளவு வானூர்திப் பிரிவு என்பவற்றின் தளமும் அதுவாகும்.

ஆளில்லாத உளவு வானூர்தி, 'பீச்கிராப்' எனப்படும் கண்காணிப்பு விமானம் போன்றவற்றில் உள்ள நவீன புகைப்பட மற்றும் இலத்திரனியல் சாதனங்களின் உதவியுடன் புலனாய்வுத் தகவல்கள் சேகரிக்கப்படுவதனால் இத்தளம் வான் படை மற்றும் கடற்படையினருக்கான புலனாய்வுத் தகவல்களை வழங்கும் மையமாக செயற்பட்டு வந்தது.

புதிய உத்திகளை உடைய பயிற்சிகளை வழங்கும் பொருட்டு இத்தளத்திற்கு சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து பயிற்சியாளர்கள் வந்து செல்வது வழக்கம்.

**ஆங்கில நாளேடான "டெய்லி மிரர்" (26.10.2007) பத்திரிகையில், பாதுகாப்புத்துறை ஆய்வாளர் சுனில் ஜெயசிறி, அநுராதபுரம் விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் குறித்து எழுதிய கட்டுரையின் முக்கிய பகுதிகள் இவை.**

### சாலியபுரவில் விழா

'கஜபா சுப்பர் குறஸ் - 2007'' எனப்படும் விழா தாக்குதலுக்கு முன்னைய இரவு நடைபெற்றது. சாலியபுர விளையாட்டுத் திடலில் நடைபெற்ற இந்த விழாவில் படைத்துறையில் உள்ள பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர். சாலியபுர இராணுவ முகாம் அநுராதபுரம் விமானப் படைத்தளத்திற்கு அண்மையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தளத்தில் இருந்த பெரும்பாலான படையினர் தொலைக்காட்சியில் நடைபெற்று வரும் மிகவும் பிரபலமான இசை நிகழ்ச்சியை கண்டு களித்துக்கொண்டிருந்தனர். ஏனையோர் அதனை கேட்டுக்கொண்டிருந்தனர். இக் கவனக்குறைவுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகளின் புலனாய்வு தலைவர் பொட்டு அம்மானினால் அனுப்பப்பட்ட விடுதலைப் புலிகளின் சிறப்பு அணியினர் முகாமிற்கு அருகில் உள்ள தென்னந்தோப்பில் தங்கி யிருந்தனர்.

அவர்கள் கிளிநொச்சியில் இருந்த கிடைக்கும் உத்தரவுக்காக காத்திருந்தனர். ஆனால் முகாமின் செயற்பாடுகள் அமைதியாகவே இருந்தன.

இந்த அணியினர் ரி-56 ரக துப்பாக்கிகள், கைக்குண்டுகள், இலகு ரக டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள், பொதுநோக்கு இயந் திரத் துப்பாக்கிகள், இலகுரக இயந்திரத் துப்பாக்கிகள், 7 செய்மதி தொலைபேசிகள், கத்திகள் என்பவற்றை வைத்திருந்தனர். இந்த அணியில் பெரும் பாலானவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் களாக இருந்ததுடன், 3 பெண் புலிகளும் இருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அணி அநுராதபுரம் - நெலுங்குளம் வீதியைக் கடந்த பின்னர் தளத்தின் வடக்குப் பகுதியினூடாக உள்நுழைந்துள்ளது. அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தளத்திற்கு வெளியில் இருந்த முதலாவது முட்கம்பி வேலியை வெட்டி தளத்தின் வெளிப்பகுதிக்குள் நுழைந்தனர். இதற்கு அடுத்த நிலையில் சில அடி தூரத்தில் மற்றுமொரு கம்பிவேலி சமாந்தரமாக போடப் பட்டிருந்தது.

இந்த இரு வேலிகளுக்கும் இடையில் மின்சார வேலி ஒன்று சிறிதாக அமைக்கப்பட்டிருந்த போதும் அதற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிக்கவில்லை. எனவே விடுதலைப் புலிகள் இலகுவாக உள்

## தமிழீழக் கொடியுடன் தளத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்து அரசின் வான்கலங்களை அழித்தனர்

நுளைய அது அனுகூலமாக இருந்தது. தற்போதைய முக்கிய கேள்விகள் என்ன எனில், இந்த பாதுகாப்பு குறைபாடுகள் எவ்வாறு ஏற்பட்டன? யார் இதற்கு பொறுப்பு? இது சில நோக்கங்களோடு செய்யப்பட்டதா? என்பவைதான்.

விடுதலைப் புலிகளின் அணி உள் நுழைந்ததும், வானூர்தி ஓடுபாதைக்கும் வேலிக்கும் இடையில் புதைக்கப்பட்டிருந்த ஒலிகளை எழுப்பும் கண்ணி வெடிகளை அகற்றியுள்ளனர். அருகில் இருந்த பதுங்கு குழிகளுக்கு குறுக்காக இக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. ஆனால் பாதையின் இருபுறமும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

### ஓடுபாதையை நோக்கி ஊர்ந்து சென்றனர்

விடுதலைப் புலிகள் மிகவும் நேர்த்தியாக சத்த வெடிகளை அகற்றியதுடன், முதலாவது பதுங்கு குழிகளின் பின்புறம் உள்ள அணைகளை அடைந்திருந்தனர். அந்தப் பதுங்கு குழிகளில் வான்படையினர் பணியில் இருந்தனர். பதுங்கு குழிகளை அடைந்ததும் அவர்களில் ஒரு பிரிவினர் பதுங்குகுழியின் ஒரு முனையை அடைந்து விமான ஓடுபாதையை நோக்கி சத்தமின்றி ஊர்ந்து செல்ல தொடங்கினர்.

இரண்டாவது குழுவினர் பதுங்குகுழியின் மற்றைய முனையை அடைந்து இரு பதுங்கு குழிகளுக்கும் இடையில் உள்ள இடைவெளியினூடாக நகரத் தொடங்கினர். எனினும் 3 விடுதலைப் புலிகள் பதுங்கு குழியின் பின்புறம் நிலையெடுத்து இருந்தனர்.

நகர்ந்து செல்லும் விடுதலைப் புலிகளை வான் படையினர் கண்டு தாக்கினால் படையினரைத் தாக்குவதே அவர்களின் திட்டம். இதில் ஆச்சரியம் என்னவெனில் பதுங்கு குழியில் இருந்த விமானப் படையினர் எவரும் நகர்ந்து சென்ற விடுதலைப் புலிகளை அவதானிக்கவில்லை. தற்போதைய விசாரணைகளில் அவர்கள் நன்றாக உறங்கிக் கொண்டிருந்ததாக நம்பப்படுகின்றது.

முதலாவது அணியில் 14 விடுதலைப் புலிகள் இருந்தனர். அவர்களின் பணி உலங்கு வானூர்திகளின் தரிப்பிடங்களை அடைந்ததும் பதுங்கு குழிகளை அழிப்பதேயாகும்.

இரண்டாவது அணி வானூர்திகளின் தரிப்பிடங்களை அடைந்து அவற்றை அழிப்பதற்கு காத்திருந்தது.

முதலாவது அணி ஓடுபாதையை அடைந்தபோது, இரண்டாவது அணி 'வீ பகுதி'யை நோக்கி நகரத் தொடங்கியது.

அங்கு தான் எம்.ஐ- 24, எம்.ஐ-17 உலங்கு வானூர்திகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இரு அணிகளும் ஓடுபாதையை அடைந்ததும் பதுங்கு குழிக்குப் பின்னால் இருந்த 3 விடுதலைப் புலிகளும் பதுங்கு குழியை நோக்கி சரமாரியாகச் சுடத் தொடங்கினர். பதுங்கு குழிக்குள் இருந்த படையினரை கொன்ற பின்னர் அவர்களும் தமது அணிகளுடன் இணைந்துகொண்டனர்.

### அதிகாலை 3.20 மணிக்கு விமானத் தளம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள்....

அப்போது நேரம் அதிகாலை 3.20 மணி.

துப்பாக்கிச் சத்தங்களைத் தொடர்ந்து தளம் தாக்குதலுக்கு உட்படுவதை அறிந்த படையினர் முகாமை முழுமையாக உசார் நிலைக்கு கொண்டுவந்தனர்.

தாக்குதல் தொடங்கியதும் விமான ஓடுபாதையில் இருந்த முதல் நிலை பதுங்கு குழிகளை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துவிட்டனர். எனவே விமானத் கட்டுப்பாட்டுக் கோபுரத்திற்கு அண்மையாக இருந்த விமானம் மற்றும் உலங்கு வானூர்திகளுக்கு எந்த பாதுகாப்பும் இருக்கவில்லை.

கோபுரத்திற்கு அருகில் 12.7 மி.மீ. விமான எதிர்ப்புத் துப்பாக்கி நிலை இருந்தது. சில நிமிடம் நடை பெற்ற கடும் தாக்குதலுக்கு பின்னர் அதனைத் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் தளத்தின் தொலைத்தொடர்பு, ராடார், வானூர்தி எதிர்ப்பு துப்பாக்கி நிலைகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

இதற்கு முன்னர் அவர்கள் வான் பாதுகாப்பு பொறுப்பதிகாரியான பிளைட் லெப். றுவான் விஜ ரட்ன உள்ளிட்ட பல விமானப் படையினரை சுட்டுக்கொன்றனர்.

விஜயரட்ன கட்டுப் பாட்டுக் கோபுரத்திற்கு அருகில் வீழ்ந்து கிடந்தார். அவர் தனது துப்பாக்கி நிலையை அடைய முற்பட்டபோது வயிற்றில் சுடப்பட்டார். பின்னர் அதிக இரத்தப் போக்கினால் அவர் மரணமடைந்தார்.

இதனிடையே வவுனியா மற்றும் கட்டுநாயக்கா விமானபடைத் தளங்களில் உள்ள ராடரில் வவுனியாவை நோக்கி இரு பொருள்கள் செல்வது அவதானிக்கப்பட்டது. அது விடுதலைப் புலிகளின் வானூர்திகள் தான் என உறுதிப்படுத்தப்பட்டதும். வவுனியா, அநுராபுரம், கொழும்பு பகுதிகளின் மின்சாரம் நிறுத்தப்பட்டது. அதிகாலை 4.10 மணியளவில் அந்த இரு வானூர்திகளும் வவுனியாவிற்கு மேலாக அநுராதபுரம் நோக்கிச் சென்றன.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் வரையிலும் விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் இயங்கிய போதும் விமானம் அநுராதபுரம் தளத்தை அடைந்து 3 குண்டுகளை வீசின. அவற்றில் ஒரு குண்டு உலங்குவானூர்திகளின் தரிப்பிடத்திற்கு அருகிலும், இரண்டாவது குண்டு சாலியபுர இராணுவ முகாமிற்கு அருகிலும், மற்றைய குண்டு விவசாயப் பண்ணையிலும் வீழ்ந்தன. பண்ணையில் வீழ்ந்த குண்டினால் அங்கு நின்ற 12 எருமை மாடுகள் உயிரிழந்தன.

கொழும்பில் வான் படைத் தளபதி றொஷான் குணதிலக்கவும், நடவடிக்கை பணியகப் பணிப்பாளர் ஏயர் கொமோடோர் கர்சா அபயவிக்கிரமாவும் விமானப் படைத் தலைமையகத்தின் நடவடிக்கை அறையில் இருந்தனர்.

### புலிகளின் விமானங்களை தாக்குமாறு உத்தரவு

விடுதலைப் புலிகளின் விமானங்கள் அவதானிக்கப்பட்டதும் அவற்றைத் தாக்கும்படி வவுனியா வான் படைத் தளத்திற்கு தகவல் அனுப்பப்பட்டது.

ஸ்குவாட்றன் லீடர் அமிலா மொகொரி, பைலட் அதிகாரி ஏ.பி.எம் டி சில்வா ஆகியோர் இரு துப்பாக்கிதாரிகளுடன் பெல் - 212 ரக உலங்கு வானூர்தியில் புறப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் வானூர்திகளைத் தாக்குவதே அவர்களின் பிரதான நோக்கம். பெல் 212 ரக உலங்குவானூர்தி அநுராதபுரம் நோக்கிச் சென்றபோது விடுதலைப் புலிகளின் விமானங்கள் அநுராதபுரம் வான் பிரதேசத்தில் பிரவேசித்துவிட்டன.

அப்போது வவுனியா மற்றும் அநுராதபுரம் படைத்தளங்களின் படையினருக்கும் விடுதலைப் புலிகளின் விமானங்களைச் சுட்டு வீழ்த்துமாறு உத்தரவுகள் வழங்கப்பட்டன. ஆனால் அதிகாலை 4.30 மணியளவில் அநுராதபுரத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள டொரமடலாவப் பகுதியில் பெல் 212 ரக உலங்கு வானூர்தி வீழ்ந்து நொறுங்கியது.

பெல் 212 ரக உலங்குவானூர்தி தரையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தான்சிக்கியுள்ளதாக பின்னர் அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் அதனை விடுதலைப் புலிகளின் விமானம் எனத் தவறாக எண்ணியுள்ளனர். உலங்கு வானூர்தி தாக்கப்பட்டதும் வவுனியா வான் படைத்தளத்திற்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டமை பின்னர் தெரியவந்துள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளின் விமானங்கள் இரண்டும் வவுனியாவினூடாக சென்று ராடர் திரையில் இருந்து மறைந்துவிட்டன.

தரையில் விமான எதிர்ப்பு துப்பாக்கியை கைப்

**சுனில் ஜெயசிறி**
**'டெய்லி மிரர்'**

பற்றிய விடுதலைப் புலிகள் வானூர்திகளின் தரிப்பிடங்களை நோக்கி தாக்குதலை நடத்தினர். அப்பகுதியில் இருந்த விமானப்படையினர் மீதும் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தனர்.

### விமானங்களை ஒவ்வொன்றாக தாக்கி அழித்தனர்

விடுதலைப் புலிகளின் 6 பேர் இரு பதுங்குகுழிகளை கைப்பற்றி படையினர் மீது தாக்குதல்களை நடத்த, ஏனையவர்கள் விமானங்களை ஒவ்வொன்றாக அழித்தனர். இதன் போது தளத்தின் இரண்டாவது பெரிய தீயணைப்பு நிலையத்தையும் அவர்கள் தாக்கியழித்தனர்.

கடும் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது அநுராதபுரம் தளத்தின் தளபதி குறூப் கப்டன் பிரியந்த குணசிங்க வவுனியாவில் நிலைகொண்டிருந்த சிறப்புப் படையின் தளபதியான மேஜர் ஜெனரல் உ.பால் எதிரிசிங்காவை தொடர்புகொண்டு உடனடியாக சிறப்புப் படையினரை அனுப்பும் படி கேட்டுக்கொண்டார்.

இதனிடையே அருகில் இருந் கஜபா படைப் பிரிவின் படையினரும் உதவிக்கு விரைந்திருந்தனர். அப்போது சில விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதுடன் பலர் காயடைந்தனர். எனினும் சமர் தொடர்ந்தது.

'பீச்கிராப்' சில உலங்குவானூர்திகள் ஆகியவற்றை அழிப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுவிட்டனர். நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை.

காலை 7 மணியளவில் மேஜர் சந்திமால் பீரிஸ், கப்டன் கோசலா முனசிங்க தலைமையில் விரைந்த சிறப்புப் படையினர் தாக்குதலில் ஈடுபட்டனர். பின்னர் முற்பகல் 11 மணியளவில் மோதல்கள் முடிவுக்கு வந்தன்.

21 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டனர். அவர்களில் 6 பேர் குண்டை வெடிக்க வைத்திருந்தனர்.

### தமிழீழக் கொடியை வைத்திருந்தனர்

செய்மதி தொலைபேசி ஊடாக முற்பகல் 10.30 மணிவரையிலும் விடுதலைப் புலிகள் கிளிநொச்சி தலைமையுடன் தொடர்புகளை பேணி வந்திருந்தனர். அவர்கள் இரண்டு தமிழீழக் கொடிகளையும் கொண்டு வந்திருந்தனர்.




இத்தாக்குதலில் 4 அதிகாரிகள் உட்பட 13 விமானப்படையினரும், இராணுவத் தரப்பைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டிருந்தார்.

எம்ஐ - 17 -01, கே-8 - 01, பிரி-6 - 01, செஸ்னா - 150 - 01, பீச்கிராப் - 01-

பெல் 212 - 01, ஆளில்லாத வானூர்திகள் - 02 என்று மெத்தம் 8 வான்கலங்கள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன.

பிரி-6- 03, கே - 8- 01, செஸ்னா வானூர்திகள் - 01 உள்ளிட்ட மேலும் 10 விமானங்கள் சேதமடைந்தன.

தாக்குதல் நடைபெற்ற சில மணிநேரங்களில் விடுதலைப் புலிகள் அதற்கு உரிமை கோரியிருந்தனர்.

அவர்கள் தாக்குதலில் பங்கேற்ற விடுதலைப் புலிகளின் பெயர்களையும் பதவிகளையும் வெளியிட்டிருந்தனர். (10ஆம் பக்கம் பார்க்க)

---

## இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!



1985 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி இந் தியப் பிரதமர் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டது உலகறிந்த விடயம். ஆனால் இந்திரா காந்தி யாழ்ப்பாணம் வந்தது யாழ்ப்பாணத்தவர்களில் பலருக் குத் தெரியாத விடயம்.

இந்திரா காந்தி சிறுமியாக இருந்தபோது நேரு இலங்கைக்கு விஜயம் செய்தார். நேருவுடன் இந்திராவும் இலங்கைக்கு வந்தார். கொழும்பில் வைத்து அடங்காத் தமிழன் என அழைக்கப்பட்ட கணித மேதை சுந்தரலிங் கத்திடம் இந்திராவைக் கையளித்தார் நேரு.

சுந்தரலிங்கத்துடன் யாழ்ப்பாணம் வந்த இந்திரா கீரி மலையில் சுந்தரலிங்கத்தின் வீட்டில் தங்கியிருந்த போது கீரிமலைக் கடலில் நீராடச் சென்றார். கடலில் இந்திரா நீண்ட தூரம் செல்வதை அவதானித்த சுந்தரலிங்கம் நீண்ட தூரம் போக வேண்டாமெனக் கண்டித்தார். கரைக்கு வந்த இந்திரா நான் இனிமேல் உங்களுடன் பேச மாட்டேன் என சுந்தரலிங்கத்துடன் கோபித்துக் கொண்டார்.

### இந்திரா காந்திக்கு மிகவும் பிடித்த யாழ்ப்பாணத்து மாம்பழம்!

யாழ்ப்பாணத்தில் இருந்தபோது கலைப்புலவர் நவரத்தினம் இந்திரா காந் திக்கு விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். விருந்தில் இந்திராவுக்கு மாம்பழம் பரி மாறப்பட்டது. யாழ்ப்பாண மாம்பழத்தின் சுவை (போமலின் அடித்த மாம் பழம் அல்ல) இந்திராவுக்கு மிகவும் பிடித்துவிட்டது. இந்தியா திரும்பிய பின்ன ரும் நீண்ட காலம் யாழ்ப்பாண மாம்பழத்தைத் தருவித்து சாப்பிட்டாராம் இந் திரா. இத்தனைக்கும் இந்திய மண்ணில் மல்கோவா போன்ற ருசியான நூற்றுக்கு மேற்பட்ட மாம்பழ வகைகள் விளைவதும் அவை உலகப் பிரபல்யம் பெற்று அந்தக் காலத்திலேயே ஏற்றுமதியாகி வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஒக்.28

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய பன்னிரு திருமுறை முற்றோதல் பூர்த்தி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமான பன்னிரு திருமுறை முற்றோதல் இன்று நிறைவடையவுள்ளது. (203)


## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

**இடம்: கல்லூரி "அருணாசலம் மண்டபம்"**
**காலம்: 11.11.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அ.கபிலாயபிள்ளை, தலைவர். (சி/54140) செ.சபாரத்தினம், செயலாளர்.

## மலிவு விற்பனை

1. இந்தியன் முருங்கை ஒரு கன்று - 30/=
2. ஒரு கிலோ கொய்யா ஒரு கன்று - 30/=
3. அப்பிள் கொய்யா ஒரு கன்று - 30/=
4. மரமுந்திரிகை ஒரு கன்று - 30/=
5 அகத்தி ஒரு கன்று - 30/=
6. பருத்தி ஒரு கன்று - 20/=
7. மாதுளை ஒரு கன்று - 30/=

இந்தியன் முருங்கை விதைகள் விற்பனைக்குண்டு. கன்றுகள், விதைகள் கூடுதலாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: நிர்வாகத்தினர், அல்லாரை விவசாய உற்பத்திப் பண்ணை, அல்லாரை, கொடிகாமம். (67563)


# இன்றைய போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.28

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் முதல் சுற்றில் யாழ்.உதைபந்தாட்டத் தெரிவு அணியும் பருத்தித்துறை உதைபந்தாட்டத் தெரிவு அணியும் இன்று ஞாயிற்றுக்கிழமை மோதவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இந்தப் போட்டி இடம்பெறும். (50)

* * *

வலி.வடக்கு,ஒக்.28

யாழ்.மாவட்ட தாச்சி சங்கம், யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

* தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம்.

* மயிலிட்டி நியூகிட் விளையாட்டுக் கழகம் எதிர் தையிட்டி ஈஸ்வரி விளையாட்டுக்கழகம். (50-86)


## SCHOOL VAN SERVICE

உரும்பிராய், கோப்பாய், இருபாலை, திருநெல்வேலி, நல்லூர் பிரதேச மாணவர்களுக்கான வான் சேவை.
தொடர்பு: ஜெயா வீடியோ சென்ரர், இல.63, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P.: 077 6059644

## புறொயிலர்விற்பனைக்கு

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் 1kg 550 ரூபா மட்டும்.
குமரன் பாம், 227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். (67331)

## கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், ஊர்ச்சேவல்கள் என்பன வேண்டிய நிறைகளில் மிக மலிவான விலைகளில் எந்தநேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:- மெல்சியாம் சென்ரர் 61, இராமநாதன் வீதி, கலட்டி.
கிளை:- சுவாமியார் வீதி, அந்தோனியார் கோவிலடி, கொழும்புத்துறை. (67336)

## திருமண சேவை

ஆசிரியர்கள், கலை, விஞ்ஞானப் பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், உட்படப் பல தரப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறை சார்ந்தோரின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.

உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற மணமக்களைத் தெரிவுசெய்ய இன்றே நாடுங்கள்!

த.சிவானந்தன், பிரபல சோதிடர், 5, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (67346)


# மரண அறிவித்தல்கள்



## நாகன் சுப்பையா

கோண்டாவில், தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட நாகன் சுப்பையா 26.10.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும் சறோஜினிதேவி, கமலாதேவி, சந்திராதேவி, முத்துலிங்கம்(முத்தொளி வீடியோ, யாழ்பல்கலைக்கழக நூலகம்), நாகேஸ்வரி, விக்கினேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தவனம், சின்னையா, சடாசிவம், பாலகிருஷ்ணர், உதயகுமார்(ஜேர்மனி), செல்வராணி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (27.10.2007) சனிக்கிழமை நடைபெற்றுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: முத்துலிங்கம் (மகன் - முத்தொளி வீடியோ).

## நவசிவாயம் விசாலாட்சி

காரைநகர், செம்பாடு தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நவசிவாயம் விசாலாட்சி 24.10.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நவசிவாயத்தின் (முன்னாள் கல்கமுவ வர்த்தகர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாத்தாண்டிய வர்த்தகர் சண்முகம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற அரன்குமார், லலிதாம்பிகை, கங்காதேவி, தேவகுமாரி, புஸ்பராணி, சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான காமாட்சி, காசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் இராமச்சந்திரன், அம்பலவாணர், பொன்னம்பலம் (யாழ்.வர்த்தகர் ASA), இராஜேந்திரம், சுசிலாதேவி, சிவறோஜினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.10.2007) காலை 8.30 மணிக்கு கல்கிஸ்சை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, Moor Road, Wellawatte. (67365)

தகவல்: கா.ஸ்ரீசண்முகராஜா (மருமகன்).

## தாமோதரம்பிள்ளை இரத்தினசிங்கம்

(புகையிரதத் திணைக்கள ஓய்வுபெற்ற பணியாளர்)

அளவெட்டி கிழக்கு, அலுக்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இரத்தினசிங்கம் 23.10.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அன்றையதினம் பிற்பகல் 3 மணியளவில் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி. (67366)

தகவல்: பூ.அனுஷா (மகள்), இ.சஞ்சயன் (மகன்), இ.நிரஞ்சன் (சுட்டி - மகன்).

## முருகேசு குணரத்தினம் (குணம்)



(கட்டைவேலி நெல்லியடி தெங்கு பனம்பொருள் கூட்டுறவு அபிவிருத்தி சங்க முன்னாள் தலைவர்)

அல்வாய் தெற்கு, ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவரும் கட்.நெல்.தெ.ப.பொ.கூ.சங்க முன்னாள் தலைவருமான முருகேசு குணரத்தினம் அவர்கள் 23.10.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - லட்சுமி தம்பதியரின் மகனும் செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் திருமதி குணறஞ்சிதம் சிவசுப்பிரமணியம், குணதாஸ் (கட்.நெல்.தெ.ப.பொ.கூ.சங்க பணியாளர்), பிறேமதாஸ் (ஜேர்மனி), யசோ, விநாயகதாஸ், காலஞ்சென்றவர்களான பத்மரஞ்சினி, கிருஷ்ணதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியம் (மதுவரி திணைக்களம், மன்னார்), குணதாஸ் லதா, மங்கையற்கரசி பிறேமதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் செல்வராணி, பகவதியம்மா, காலஞ்சென்ற குண்டுமணி, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவபாதம், சபாநாயகம், திருமதி அரியதுரை புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.10.2007 புதன்கிழமை அல்வாய் மங்குவேம்படி மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினருக்கு அறியத் தருகின்றோம்.

(67341)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிறிதரன்

உசனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிறிதரன் 24.10.2007 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (நெல் சந்தைப்படுத்தும் சபை, மன்னார்)- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் இரவீந்திரன், காலஞ்சென்ற தபீந்திரன், சுமந்திரன் (கொலன்ட்), திருச்சோதி, பிரகலாநிதி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாக்கியம் (கனடா), மகேந்திரன், பிரபாகரன், லோசனா ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகா (கனடா), கீர்த்திகா (லண்டன்), தர்சிகா (கனடா), சுவிதா (கனடா), கிஷாந் (கனடா), வைஷ்ணவி, பிரவீனா ஆகியோரின் சிறிய தந்தையும் கணேசமூர்த்தி (கனடா), இராதாகிருஷ்ணன் (லண்டன்), குகானந்தன் (கனடா), கோமதன், நிந்துஜன், நிதர்சன், கார்த்திகன், அபிராமி, சிவானி, நிதர்சனா, நிலக்சனா ஆகியோரின் மாமனும் அர்வின் (கனடா), ஐஸ்வர்யா (கனடா), ராகவி (லண்டன்), அதுசன் (கனடா), அதுசனா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2007) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு.இரவீந்திரன், உசன், மிருசுவில். (67367)

தகவல்: பாக்கியம் (தாய்).

# விழிநீர் சொரியும் 67ஆம் நாள் நினைவு

## திருமதி ஜெனிசன் சுஜாத்தா (கார்த்திகா)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13.11.1975 | 24.08.2007 |

"கண்ணீர் துளிர்க்கையிலே - நீ காற்றாகிப் போனதென்ன"

எண்ணுகின்ற போதெல்லாம் எழுந்தோடி வருகின்றாய்
கண்ணயரும் வேளையிலும் கனவில் வந்து சிரிக்கின்றாய்
வண்ணமயில் போல வந்து வடிவங்கள் காட்டுகின்றாய்
கண்ணீர் துளிர்கையிலே நீ காற்றாகிப் போனதென்ன
ஆசைபட்ட தெல்லாம் பணமிருந்தால் வாங்கலாம்
ஆ! அம்மாவை வாங்க முடியுமா?
உன் அருகில் நாம் வரும் வரைக்கும்
கண்ணீர் மலர்கள் தூவி அஞ்சலிக்கின்றோம்.

41, நாயன்மார் வீதி, நல்லூர். (67361)

அ.ஜெனிசன் (கணவர்), சாமந்தி, சாம்பவி (பிள்ளைகள்).

## தவறிவிட்டது

வீமன்காமம், தெல்லிப்பழை என்னும் முகவரியைச் சேர்ந்த செல்லப்பா முத்துலிங்கம் என்பவரது தேசிய அ.அட்டை (460760372V) விசேட அ.அட்டை (0907019470) என்பன 21.10.2007 அன்று நீர்வேலி பூதர்மடத்திற்கும் கரந்தன் வெங்காயச் சங்கத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செ.முத்துலிங்கம் காமாட்சி அம்பாள் கோயிலடி, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தர் சின்னத்தம்பி

திருமதி சின்னத்தம்பி தஞ்சம்மா

மக்களுக்கு அன்புத் தாய்
தந்தையாக
பாசத்துடன் அரவணைத்து
பண்புடன் வளர்த்தீர்கள்
ஊர்போற்ற நாம் வாழ
பார்த்து மகிழ்ந்தீர்கள் - இன்று
ஏக்கத்துடன் எமை வாழவிட்டு
எங்கு சென்றீர்கள்?

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மகன்- முருகானந்தம் குடும்பம்,
மகன் - சிவானந்தம் (சுவிஸ்) குடும்பம்.

செம்பாட்டோலை, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (67364)

திதி: 28.10.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி அந்தப் பாதையில் நடந்திட முனைவோம்

அமரர் பேராயர் அதி. வண. டாக்டர் டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் ''உதய தாரகை'' பத்திரிகையில் 1996 ஆம் ஆண்டு டிசெம்பரில் கிறிஸ்மஸ் விழாவின்போது எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி இது. சமகாலத்துக்கும் அது பொருத்தமாக உள்ளது. அவரது பத்தாம் ஆண்டு நினைவு தினம் இம் மாதம் பத்தாம் திகதியாகும்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் திருவிழாக்காலத்தை வரவேற்பதற்கு யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் ஒருங்கிணைந்த 'கறோல்' பாடல் நிகழ்ச்சிகளைப் பல தசாப்தங்களாக நடத்தி வந்துள்ளன.

கிறிஸ்தவ, கத்தோலிக்க மற்றும் அரசாங்க பாடசாலைகளிலிருந்தும் கூட பாடல் குழுக்கள் மிகுந்த பக்தி சிரத்தையுடனும் உற்சாகத்துடனும் இதில் கலந்து கொள்வதுண்டு. அமைதிக்கும் நல்லெண்ணத்துக்குமான தேவதூதர்களின் செய்தியினை மகிழ்வோடும் நம்பிக்கையோடும் அவர்கள் பகிர்ந்துகொள்வார்கள்.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில் வலிகாமத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பெரும் எடுப்பில் மக்கள் இடம்பெயர்வுகள் நிகழ்ந்தன. அதனால் அந்த ஆண்டுக்கான வருடாந்த நிகழ்வு இடம்

**பேராயர் அதி.வண.டி.ஜே.அம்பலவாணர்**

பெறாமல் போயிற்று.

அடுத்த ஆண்டு இடம்பெயர்ந்த மக்களில் அரைப்பங்கினர் திரும்பிவிட்ட நிலையில் பெரும்பாலான பாடசாலைகளும் இயங்கத் தொடங்கிவிட்டதால் குறைந்த அளவிலேனும் பாடசாலைகள் மீண்டும் ஒருங்கிணைந்து கரோல் பாடல் குழுக்களை அமைத்துப் பணியைத் தொடங்கின; என்றாலும் ஒரு சங்கடம் இருந்தது.

வலிகாமத்திலிருந்து யாழ்ப்பாண நகரையும் தென்மராட்சியையும் பிரித்து வைத்திருந்த பாதுகாப்பு அரண்களினால் ஏற்பட்ட சங்கடங்களும் இடையூறுகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியிருந்தன. எனவே பாதுகாப்பு அரண்களுக்கு இரண்டு புறத்திலும் இரு வேறு மையங்களில் விழாக்களை நடத்துவதே உத்தமம் என்று கருதப்பட்டது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒன்றும், உடுவில் மகளிர் கல்லூரியில் ஒன்றுமாக நடத்த முடிவு செய்யப்பட்டது. இவ் விழாக்களில் பதினாறு பாடசாலைகள் பங்கேற்றன.

## மரணங்களின் இறுதியில் தெய்வீக சக்தி வெற்றி சூடும்

**அமைதிக்கு ஒரு வாய்ப்பு**

''அமைதிக்கு ஒரு வாய்ப்பளியுங்கள்'' என்பதே உடுவில் நிகழ்வின் அடித்தளமாக இருந்தது.

சின்னஞ் சிறுசுகள் தம் இனிய குரல்களில் பின்வருமாறு இசைத்ததைக் கேட்க மனம் நெகிழ்ந்து போயிற்று.

★ அமைதிக்கொரு சந்தர்ப்பம்,
அதைத்தான் நாம் கேட்கின்றோம்
★ அமைதிக் கொரு வாய்ப்பு
அதற்காகவே ஜெபிக்கின்றோம்
★ அமைதிக் கொரு சந்தர்ப்பம்
அதனையே நாம் பாடுகின்றோம்.

முதலாவது கிறிஸ்மஸ் தினத்தில் பாடப்பெற்றதான தேவதூதர்களின் தேவகீதத்தின் சொற்களை கிறிஸ்மஸ் விழாக்களின் போது மீண்டும் மீண்டும் கேட்டு மகிழ்வதற்கு நாம் தவறுவதில்லை.

''உன்னத நிலையிலிருக்கின்ற
இறைவனுக்கு மகிமை,
பூவுலகில் சமாதானம்
மனித சமுதாயத்தில் நல்லிணக்கம்''

**''அச்சம் கொள்ளாதீர்''**

அச்சமடையாதிருப்பீர்களாக''என்று மேய்ப்பர்களுக்குத் தேவதூதன் அருளிய செய்தியின் முதல் வாக்கியத்தை நாம் மறந்துவிடாதிருப்போமாக.

தேவதூதனின் இதே குரலை சக்கரியாசும் ஏற்கனவே கேட்டிருந்தார்.

'அச்சம் கொள்ளாதே' இதே வாக்கியத்தின் மூலம் அன்னை மேரியும் ஊக்கமடைந்தவளானார். 'மேரியே! அஞ்ச வேண்டாம்'.

பயத்தினால் மனம் வெதும்பிப் போயிருந்தவர்களுக்கே தேவதூதர்களின் இந்த பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தி வழங்கப்பெற்றது.

அமைதியின் நற் செய்தி - மனித இனத்திற்குள் நல்லிணக்கம், கிறிஸ்துவாகிய மீட்பரின் மூலமே வருகின்றது.

இறைவனை முதன் முதல் ஏதேன் தோட்டத்தில் ஆதாம் தரிசிக்க நேர்ந்தபோது அவன் பேசிய முதல் வாக்கியம் ''தோட்டத்தில் உமது சந்தடிகளைக் கேட்டேன், அச்சமுற்றேன்'' என்பதாகும். வரலாறு முழுமையும் மனிதனின் வாழ்க்கை அச்சம் நிறைந்ததாகவே இருந்துள்ளது. பயத்திலிருந்து விடுபடவே மனிதன் முயன்று வந்துள்ளான் என்பதை ஒவ்வொரு நாகரீக வரலாறும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது. மேலும் மேலும் பயத்துக்குள்ளேயே அவன் மூழ்கிப் போய்க்கொண்டிருக்கின்றான்.

**ஆக்கிரமிப்புக்கு ஆளான மக்கள்**

தேவதூதரின் செய்தியைக் கேட்ட மக்கள் அச்சமுறுவதற்கு பல காரணங்கள் இருந்துள்ளன. இராணுவ ஆக்கிரமிப்பு கொண்ட ஒரு தேசத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். பாலஸ்தீனத்தின் வீதிகளில் ரோமானிய இராணுவ வீரர்களை எப்பொழுதுமே



காணக் கூடியதாக இருந்துள்ளது. அவர்களின் பாசறைகள் நாட்டின் எல்லா இடங்களிலும் அமைந்திருந்தன. முகவர்களுக்கு மக்களிடமிருந்து கப்பம் பெறுமாறு பணிக்கப்பட்டிருந்தது. அவர்களுடன் ஏரோது என்பான் பிரதானமாக இணைந்து செயற்பட்டான். தனது மக்களையே ஆக்கிரமிப்பாளர்கள் ஒடுக்குவதற்கு அவன் துணைபோனான்.

சமாதானத்துக்கும் மகிழ்ச்சிக்குமான கிறிஸ்தவகீதம் குற்றமற்றவர்களின் கொலைகளைத் தொடர்ந்து கேட்கின்றது.

''ராச்சல் தனது குழந்தைகளுக்காக அழுகிறாள். ஏனென்றால் அவர்கள் இனி மேலும் உயிருடன் இல்லை''

இன்று அச்சத்தினாலும் அங்கலாய்ப்பாலும் பீடிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் நாடுகளுக்கும் தேவகுமாரனின் சமாதானத்துக்கும் சந்தோஷத்துக்குமான செய்தி வருகிறது.

துப்பாக்கிகளின் - எறிகுண்டுகளின் சத்தங்கள், டாங்கிகள், கவச வாகனங்களின் நடமாட்டங்கள் மட்டுமல்ல சுப்பசொனிக் விமானக் குண்டுவீச்சுக்களும் கேட்டவண்ணமிருக்கின்றன. பசியால் வாடுபவர்களின் அழுகுரல், வீடுகளை இழந்தவர்களின் துன்பம், இடம்பெயர்ந்து காயமுற்றவர்களின் முனகல், குழந்தைகளை இழந்துவிட்டு தவிக்கும் தாய்மார்களின் அவலக் குரல்கள் யாவும் எம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

மக்கள் பயத்தில் ஆழ்ந்து போயிருக்கிறார்கள். ஆனால் சமாதானத்துக்கான தேவகுமாரனின் பிறப்பினைப் கொண்டாடும் கிறிஸ்தவர்கள், அழிவு சக்திகள், போர் மற்றும் மரணங்களின்மீது இறுதியில் தெய்வீக சக்தி வெற்றிவாகை சூடும் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

அடர்ந்த காட்டின் உச்சத்திலிருந்து சமாதானத்துக்கான தேசத்தை எட்டிப்பார்ப்பது என்பது ஒரு விடயம். ஆனால் அதை நோக்கிய பாதையில் அடி வைத்து முன்னேறுவது என்பது வேறு விடயம் என்கிறார் புனித அகுஸ்தினார். எனவே அமைதிக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி அந்தப் பாதையில் நடந்திடுவோமாக...!

- தமிழில்: **நந்தன்** -

# ஆஸ்பத்திரி மற்றும் தொழில்களுக்கு செல்வோர் இடைநடுவில் அவதி

**ஏ-9** வீதி முடப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. இக் காலப்பகுதியில் தினமும் தொடர் வாகன அணிகள் செல்லும் வேளைகளில் வீதிப் போக்குவரத்து தடை செய்யப்படுவதால் பொதுமக்கள் தினமும் படும் கஷ்டங்கள் சொல்லில் அடங்கா.

அவசர தேவை தொடக்கம் சாதாரண தேவைகளுக்கென செல்லும் பொதுமக்கள் மணிக் கணக்கில் வீதிகளில் காத்திருக்க வேண்டியுள்ளது.

பாதை மறிப்பினால் பெருமளவு பாதிக்கப்படுவது ஏ-9, ஏபி-20 வீதிகளைப் பயன்படுத்துவோரே. பகல்வேளைகளில் சுமார் ஒரு மணித்தியாலம் தொடக்கம் இரண்டரை மணித்தியாலம் வரையும் மாலை வேளைகளில் சுமார் ஒன்று தொடக்கம் ஐந்து மணித்தியாலம் வரை வீதிகளில் தவம் கிடக்க வேண்டியுள்ளது.

கொடிகாமம் தொடக்கம் யாழ்.கச்சேரி வரையுள்ள ஏ-9 வீதியையும் பருத்தித்துறையிலிருந்து வல்லைச்சந்தி வரையுள்ள ஏபி-20 வீதியையும் இணைக்கும் நூற்றுக்கும் அதிகமான குறுக்கு வீதிகள் அனைத்தும் போக்குவரத்துக்கு முள்கம்பிகள் போட்டுத் தடுக்கப்பட்டுள்ளன. வாகனத் தொடரணி வரும் அறிகுறி தென்பட்டதும் வீதியில் வரும்



வாகனத் தொடரணி தாண்டிச் செல்லும் வரை காத்திருக்கும் மக்கள்

வாகனங்கள் அனைத்தும் அருகில் உள்ள ஒழுங்கைகளுக்குள் விடப்படுகின்றன.

என்னென்ன தேவைகளுக்கு வாகனங்களில் பயணிக்கிறார்கள் என்று யாருக்குத் தெரியும். மணிக்கணக்கில் காத்திருந்துவிட்டு, செல்லும் தேவை பூர்த்தியடையாமல் கவலையுடன் வீடு திரும்புவது வழமையாகிவிட்டது.

**நோயாளர்கள், பார்வையாளர்கள்**

வடமராட்சி, தென்மராட்சி பிரதேச மக்களுக்கு எந்தவொரு வைத்திய தேவைகளுக்கும் யாழ்ப்பாணம் செல்லவேண்டிய நிலை. மருத்துவ வசதிகள் அனைத்தும் யாழ்ப்பாணத்தில் கிடைப்பதால் வடமராட்சி, தென்மராட்சி பிரதேச மக்கள் அங்கு செல்லவேண்டியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுவோரைப் பார்வையிடச் செல்வோர் வாகனங்களில் செல்லும் வேளைகளிலேயே (காலை 9 மணி தொடக்கம் பகல் 12.30 மணிவரை) வாகனத் தொடரணி வீதிகளில் புறப்படும். அவ்வேளையில் பாதைகள் தடைசெய்யப்படுகின்றன. நோயாளர்களைப் பார்வையிடச்செல்வோர், உணவு கொண்டு செல்வோர் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணம் சென்றடைவதால் நோயாளரைப் பார்க்க உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் காலை சமைத்த உணவுடன் வைத்தியசாலை வளாகத்தில் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வீட்டிலிருந்து மதிய உணவு வரும் என எதிர்பார்த்து விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் [illegible] உணவு அருந்த [illegible] தவிக்கின்றனர்.

மாலைவேளை நோயாளர்களைப் பார்வையிட அனுமதித்த பின்னர் உட் செல்லும் பார்வையாளர்கள் நெருப்பில் நிற்பது போல் அவசர அவசரமாக நோயாளரைப் பார்த்துவிட்டுத் திரும்புகின்றனர்.

நோயாளர் பார்வையிடும் நேரம் முடிந்து அனைவரும் சென்ற பின்னர் வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவினை சாப்பிடுவதற்கு எடுக்கும் நோயாளர் அந்த உணவு பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் அதனை உண்ணாமல் வீசுகின்றனர். காலையில் சமைத்த உணவு மாலை வரை பொட்டலமாகக் கட்டியபடி இருந்தால் அது பழுதடைந்து சாப்பிடமுடியாத நிலையில் கொட்டப்படுகிறது. இதனால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் பகல் மற்றும் இரவு உணவு உண்ணாமல் பட்டினியாக இருக்க வேண்டியநிலை உண்டாகிறது.

**இரவில் பீதியுடன் நடந்து செல்லும் நிலை**

வீடுகளில் பிள்ளைகளை விட்டு விட்டு நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் பாதை மறிப்பினால் மாலை வரை காத்திருந்து நோயாளரை ஆறுதலாகப் பார்க்க முடியாமல் அவசரமாக வீடு திரும்புவோர் மாலை நேர வாகனத் தொடரணி வருவதால் அவை சென்று முடியும்வரை வீதிகளில் தவம்கிடக்க நேரிடுகிறது. சிலவேளைகளில் இரவு 9 மணி வரை வீதிகளில் காத்திருந்து வீடு செல்லாமல் இடைவழியில் தங்கிவிட்டு மறுநாள் காலையில் வீடு செல்லும் அவலநிலையும் காணப்படுகிறது.

இவ்வாறான பாதை மறிப்புகளால் வீடுகளில் குழந்தைகளை விட்டு விட்டுச் செல்வோர் படும் துயரம் கொஞ்சநஞ்சமல்ல. மாலைவேளை பாதை மறிப்பினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் வடமராட்சி மற்றுத் தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களே. இருள் சூழ்ந்த பின்னர் பருத்தித்துறை, கொடிகாமம் பேருந்து நிலையங்களில் இறங்கும் [illegible] அனைவரும் மூன்று, [illegible]களுக்கு ஊரடங்கு வேளையில் பீதியுடன் நடந்து செல்லவேண்டியுள்ளது.

ஊரடங்கு நேரத்தில் வாகனங்களில் வரும் பொதுமக்கள் நடந்து செல்ல அனுமதிக்கப்படுகிறபோதிலும் சில இடங்களில் இருட்டுவேளையில் தனித்துச் செல்ல வேண்டிய பெண்களின் மனோநிலையை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலை கிளினிக் மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களில் வைத்திய ஆலோசனை, பரிசோதனைகளுக்கும் செல்வோருக்கு ஏற்படும் சங்கடங்கள்.

கிளினிக் பரிசோதனைக்காக முதல் பஸ்ஸில் செல்வதற்கு அதிகாலை வீதிக்கு வருவோர் யாழ்ப்பாணம் சென்று கிளினிக் முடிந்த பின்னர் வீடு திரும்பும்வேளையில் பாதை மறிப்பு இடம்பெறுவதால் வீதிகளில் காத்திருந்து வீடு செல்ல பகல் 2 மணிக்கு மேலாகிவிடுகிறது. இதனால் காலையில் தேநீர்கூட அருந்தாமல் செல்லும் நோயாளர்கள் பிற்பகல் 2மணி வரை பட்டினி கிடக்க வேண்டியுள்ளது.

**கடற்றொழிலாளர் பாதிப்பு**

அடுத்து பாதை மறிப்பினால் பாதிக்கப்படுவோர் கடற்றொழிலாளர்களே. தற்போதைய கடல் வலயச் சட்டத்தினால் காலை ஆறு மணிக்குப் பின்னர் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படும் கடற்றொழிலாளர்கள் கரை திரும்ப பத்து மணி செல்லும். அதன் பின்னர் பல மைல்களுக்கு சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் கடல் உணவுகளைச் சந்தைக்குக் கொண்டுவரும் வேளையில் பாதை மறிக்கப்படுவதால் மீண்டும் அனுமதிக்கப்படும் வரை வீதியில் காத்திருக்க வேண்டியுள்ளது.

பாதை திறக்கப்பட்டதும் சந்தைக்குக் கொண்டு வரும்போது பெருமளவு கடல் உணவுகள் பழுதடைந்து வீச வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிலவேளைகளில் பகல் ஒரு மணிக்குப் பின்னர் பாதை திறக்கப்படுவதால் கடல் உணவுகளை சந்தைக்குக் கொண்டு செல்லமுடியாமல் வீடுகளுக்குத் திருப்பிக் கொண்டு செல்லவேண்டியுள்ளது.

**உத்தியோகத்தர்கள்**

மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் அரச தொழிலுக்காக வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேச அ[illegible] அலுவலகங்களில் பணிபுரிகின்றனர். காலையில் உரிய நேரத்திற்கு அலுவலகங்க[illegible]ங்கு வருகின்றபோதிலும் மாலையில் நே[illegible]காலத்துடன் வீடு செல்லத் தாமதமாவதற்குப் பாதை மறிப்புக் காரணமாகிவிடுகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க..)

# தென்மராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி மக்கள் அனுபவிக்கும் தாமதங்களும் இடையூறுகளும் பலப்பல

-மாயவன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FORUT

FORUT is a Norwegian /Swedish Development Agency and has been working in Sri Lanka since 1983 in partnership with local communities and in close collaboration with local government stakeholders.

## Vacancy for a Driver - FORUT Jaffna

We are seeking applicants residing in Jaffna District to fill in the above vacancy. Candidates who meet the following criteria will be given preference.

- Posses valid driving license for classes A and D
- Excellent driving skills with thorough knowledge of Sri Lankan road regulations and basic vehicle maintenance
- Minimum 5 years experience as a driver preferably in an INGO and a good team player
- Experience in handling communication equipments such as radio
- Willingness to travel to any part of the country.
- Trainings on First Aid, Security Training for Drivers will be an added advantage.
- Good knowledge of English and Sinhala
- Should be willing to work long hours under pressure and holidays when required.
- Perform any other duties as instructed by the Assistant/District Programme Manager
- Preference will be given to those who are living within 10 kms from FORUT Jaffna Regional Office.

Interested candidates should send in their resume to the address below on or before 5th November, 2007.

Assistant District Programme Manager,
FORUT
139, Temple Road, Jaffna Email: jaffna@forut.lk

**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please**

*"Enhancing the quality of life of the people by empowering them through their participation"*


## மணமகள் தேவை

கனடாவில் PR உள்ள இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, A/L படித்த, 1973 இல் அச்சுவினி முதலாம் பாதத்தில் பிறந்த மணமகனுக்கு A/L இற்கு குறையாத கல்வியுடன் நிறமான, அழகிய மணமகள் தேவை.

தொடர்பு:- 060 221 4471
முருகமூர்த்தி கோவிலடி, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (67280)

## ஒத்துமாறல்

கொழும்பு 12இல் உள்ள பிரபல தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் கலைப் பட்டதாரி ஆசிரியர்(புவியியல்) யாழ்ப்பாணத்துக்கு ஒத்து மாறவிரும்புகிறார். விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
85, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773911229 (67121)

## காணி விற்பனைக்கு

வடமராட்சி நகரசபை எல்லைக்குட்பட்டதும் அமைதியான அழகான சூழலில் அமைந்ததும், பருத்தித்துறை பஸ்நிலையத்துக்கு அண்மையில் உரித்துக்கு உத்தரவாதம் வழங்கக் கூடிய வகையிலும் அமைந்த காணி ஒன்று உடன் விற்பனைக்கு உள்ளது. இக்காணியானது 2 பரப்பு விஸ்தீரணம் உடையதாகும். தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- 024 222 2429
077-3222740
(சி/53380)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler. கல்பேட் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம்.
(Electronic நிறுவை)
**நல்லூர் பாம்,**
19, முருகேசர் லேன், நல்லூர்.
(67256)

## விற்பனைக்கு

ஆட்டுக்கடாய் விற்பனைக்கு உண்டு.
20, கோம்புத்துறை வீதி.
கண்டுக்குளி.
(67316)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 19 ★ 05 ★ 1918
மறைவு 25 ★ 09 ★ 2007

அமரர் **சின்னையா முத்துத்தம்பி**

*கடந்த 25.09.2007 பௌர்ணமி தினத்தில் சிவபதமடைந்த மைத்துனர் சின்னையா முத்துத்தம்பியின் இறுதிக்கிரிகைகளில் கலந்துகொண்டோருக்கும் வெளிநாட்டிலிருந்து துயரம் பகிர்ந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.*

துலாவை, அல்வாய் கிழக்கு.
அல்வாய். (சி/54128)

குடும்பத்தினர்.
Dr. **வேலும்மயிலும்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**ஏரம்பமூர்த்தி நாகேஸ்வரன்**



மலர்வு 11.06.1951 உதிர்வு 08.11.2006

**திதி:- 28.10.2007**


எங்கள் இதயத் தெய்வமே
ஆயிரம் உறவுகள் வந்துவிட்டாலும்
அப்பா உனக்கு நிகராகுமா?

சாவினில் நீ எம்மை பிரிந்துவிட்டாய்
ஆயிரம் நினைவுகளில் வாழ்கின்றோம்
ஆறாத மனமே நீ எங்களிடம்
ஆண்டவன் அடியில் நீ உறைவிடம்
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(67303)

*ஆசிரியமணி*
**அ.பஞ்சாட்சரம்** அவர்களின்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு அழைப்பு



**காலம்:** நாளை (29.10.2007) திங்கட்கிழமை
**இடம்:** "ஆசிரியமணி" இல்லம், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
**நேரம்:** ★ மு.ப. 10 மணி - ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கிரியை.
★ மு.ப. 11 மணி - "ஆசிரியமணி" மலர் வெளியீடு.

ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் மலர் வெளியீட்டு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
(தனிப்பட்ட அழைப்பாகவும் இதனை ஏற்றுக்கொள்ளவும்)

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (67344)

**ஆசிரியமணி குடும்பத்தினர்.**






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடிவு

இரவு 11.30. போட்டர்மணியை அடித்தான். 'ஸ்ரேசன் மாஸ்ரர்' ஊதலை வாயில் வைத்து ஒருமுறை ஊதிவிட்டுப் போனார். புகையிரதம் கண்டியை விட்டு வதுளையை நோக்கிப் புறப்பட்டது.

ஸ்ரீபாதம் போகும் காலம். சனம் வண்டியில் நிரம்பிச் சொரிந்து கொண்டிருந்தார்கள், பட்டையிற் பனங்கிழங்கு குத்தி அடுக்குவதைப்போல! அவ்வளவு சன நெருக்கம். மிதி பலகையில் கூடப் பலர் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

சோமாவதியும் சுசிலாதேவியும் 'சாது! சாது! சா....து' என்று தேனொழுக ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். பாட்டிமாரின் தளர்ந்த குரலின் பின்னே! என் வாயும் சாது! சாது! என்று முணுமுணுத்தது. என் மனம் சுசிலாதேவியின் அழகில் மயங்கி இருந்த நேரத்தில்கூட புகையிரதத்தின் வேகம் குறைந்தது. பிறகு நின்றுவிட்டது.

நாவலப்பிட்டியில் நெருக்கி அடித்துக் கொண்டு திடகாத்திரமான வாலிபர் நால்வர் ஓடிவந்தனர். உள்ளே நுழைந்தார்கள். 'கோட்', கண்ணாடி, பட்டுச்சாரம் அணிந்திருந்தார்கள். ஏதோ பெரியவீட்டுப் பிள்ளைகளைப்போல 'மகாத்மயா' என்று சொல்லிக்கொண்டே ஓர் ஓரத்தில் ஒருவன் இருந்துவிட்டான். மற்றவர்கள் மூலைக்கொருத்தராய் பிரயாணிகள் சாய்ந்துகொள்வதற்கு விடப்பட்ட சட்டங்களில் ஏறி உட்கார்ந்தார்கள். புகையிரதம் முக்கி முனகிக்கொண்டே மலைமேல் நத்தை வேகத்தில் ஊரத்தொடங்கியது.

எவ்வளவு நேரத்திற்கு மனிதனுக்கு அலுப்புத் தட்டாமல் இருக்கும். அதுவும் இந்த ஜன நெருக்கத்தில். சிலர் தூங்கி விழத்தொடங்கினார்கள். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தவன் மாதிரி சுசிலாவை என் மனோரதத்தில் ஏற்றிக் கொண்டு மெல்ல நழுவினேன். காடுகளையும் மலைகளையுந் தாண்டி ஓர் அழகிய புஸ்பவனத்தை அடைந்தது இரதம். சந்திரன் பால் வெண்ணிலாவை அள்ளி இறைத்து பவனி வந்து கொண்டிருந்தான். காட்டு முல்லைச் செடியொன்று குலுக்கிப் பூத்துநின்றது. இன்பலாகிரியைச் சொரிந்துகொண்டிருந்தது. அதன் கீழ் நின்றாள். இளமை குலுங்கிக்கொண்டிருந்தது. சந்திர ஒளி அவள் அழகுக்கு மெருகிட்டது. தங்க விக்கிரகம் போலத் தோன்றினாள். கறுத்தடர்ந்த கூந்தலை நடுவில் பிளந்து வாரி முடிந்திருந்தாள். நாகரீக முறையில் வாரிப் பின்னி மாய விந்தை செய்யும் ஆற்றல் அவளுக்கு இல்லை. காதுகளில் இரண்டு லோலாக்கு ஊசலாடிக்கொண்டிருந்தன. பட்டுப்போன்ற கன்னமிரண்டோரமும் கட்டுக்கடங்காத இரண்டு மயிர்க்கற்றைகள் சுருண்டு தொங்கிக்கொண்டிருந்தன!....

ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கைம்பது வேண்டுமென்று கத்தினாரே. சிங்களத் தலைவர் அதை மறுத்துவிட்டார்களே! வாருங்கள் தோழர்களே! தாராளமாக வழங்குகிறேன். உங்களுக்கு ஐம்பதுக்கைம்பது (பணாட்ட பணாய்) என்று தொடங்கினான் இடுக்கில் உட்கார்ந்த வாலிபன்! என் இரதம் ஓடமறுத்தது. திரும்பிப் பார்த்தேன்.

மடிமேல் ஒரு தலையணையை வைத்து விட்டு மூன்று சீட்டுக்களை எடுத்துப்போட்டான். ஒன்றில் ஓர் படமுண்டு. ஏனையவை வெற்றுச்சீட்டுக்கள். மூன்று சீட்டுக்களையும் மாறிக் கவிழ்த்து வைப்பான் ''ஒருசீட்டில் என்ன படமுண்டு'' என்று சொல்லிப் பணயம் கட்டவேண்டும். படம் இருந்துவிட்டாற் கட்டிய பணயமளவு கொடுக்கப்படும். இன்றேல் கட்டிய பணம் தோல்வி! ஆரம்பத்தில் மிகவும் ஆறுதலாகவும், இலேசாகச் சொல்லக்கூடியதாகவும் மாறிக்கொண்டே இருந்தான். யாரும் பணம் கட்டவேயில்லை!

'அதோ! நடுச்சீட்டு ரூபா பத்து' என்று ஒரு மூலையிலிருந்து ஓர் குரல் கிளம்பியது. ஆம்! அவனுக்கு வெற்றி. உடனே அவன் கைகளுக்கு ரூபா பத்து பறந்தது. மீண்டும் சீட்டுக்களை மாறிக்கொண்டிருந்தான். 'இடதுகைப்பக்கச் சீட்டு ரூபா பதினைந்து' என்றது இன்னொரு குரல். அட பாவமே! ஏது படம்? வெற்றுச்சீட்டுத்தான். இழந்தான் ரூபாவை! இப்படி ரூபாக்கள் கைமாறிக்கொண்டிருந்தன. நால்வர் மாத்திரம் இதில் ஈடுபட்டிருந்தனர். வேறு யாரும் பங்குபற்றாததை உணர்ந்த ஒருவன், அருகேயிருந்த கங்காணியையும் சேர்த்து, 'கங்காணியும் நானும் பணயம் கட்டுகிறோம். நடுச்சீட்டு ரூபா முப்பது' என்றான்! ஆம் வெற்றிதான்! கங்காணி கைக்கு வந்தது ரூபா முப்பது!

இலேசான வழியில் பணம் வந்தால் யாருக்குத்தான் ஆசையில்லை? மனிதனை ஏமாற்றும் வித்தையில் இதுவும் ஒன்றுதானே! தோட்டத் தொழிலாளர் ஏமாந்ததில் என்ன ஆச்சரியம். அவர்கள் பைகளை விரைவில் காலியாக்கி விட்டார்கள்!

'ஐயா! ஏழைகளை ஏமாற்றுகிறீர்கள்' என்று ஒருவர் கூறினார். 'யாரடா அவன்? யாரை நாம் ஏமாற்றினோம்' என்று மார்புதட்டி எழுந்தார்கள் நால்வரும். அயர் ஒருவர் நால்வருக்குமிடையில் என்ன செய்யமுடியும்? நாமேன் இதில் வீணாகத் தலையை மாட்டிக்கொள்வான் என்று மௌனமாக இருந்துவிட்டார்கள். சுயநலப்பூண்டுதானே மனிதன். தன்னினத்தவன் எக்கேடு கெட்டாலென்ன என்று எண்ணும் அற்ப புழுக்கள்!

புகையிரதத்தின் வேகம் குறைந்தது. பின்பு நின்றுவிட்டது. கை காட்டி விழவில்லை என்றார்கள். வெளியே எட்டப் பார்த்தேன். ஒருவர் பின் ஒருவராக நால்வரும் வெளியே குதித்துப் போய்க் கொண்டிருந்தார்கள். அடுத்த ஸ்தானம் தொப்பிதோட்டம். ஒருவேளை மேலதிகாரிகளிடம் சொல்லித் தம்மைக் கைதுசெய்துவிட்டாலும் என்ற பயத்தாற்போலும்!

ஒருமுறை கூவிவிட்டுப் புகைவண்டி புறப்பட்டது. அவள் கண்கள் மூடியிருந்தன, குவிந்திருக்கும் இரண்டு குமுதங்களைப்போல! மறுபடியும் என் இரதம் புறப்பட்டுவிட்டது நின்ற விடத்திலிருந்து. புற்றரையில் உட்கார்ந்தேன். மடிமேல் தலையை வைத்துக்கொண்டு நிமிர்ந்து படுத்திருந்தாள். அவிழ்ந்து புரண்டு கொண்டிருந்த கூந்தலைச் சரிசெய்துகொண்டிருந்தது என்கை.

> **எஸ்.கே. என்ற புனை பெயரில் சிறுகதைகளை எழுதிய சி.குமாரசாமி 1944 ஆம் ஆண்டில் ஈழகேசரியில் வெளியான தமது முதல் சிறுகதை மூலம் இலக்கியத் துறையில் பிரவேசித்தார்.**
>
> **தமது இயற்பெயரான சி.குமாரசாமி என்ற பெயரிலும் பல சிறு கதைகளை எழுதியுள்ள இவர், 1942களில் மறுமலர்ச்சிச் சங்கம் உருவாக்கி வைத்த தூண்டுதலின்பேரில் புனைகதைத் துறையில் பிரவேசித்த ஒருவர். சிங்கள - தமிழ் காதலிணைப்பினைக் கருப்பொருளாக்கிக் கொண்டு ஈழகேசரியில் வெளிவந்த சில புனைகதைகளில் எஸ்.கேயின் 'விடிவு' என்ற சிறுகதையும் அடங்குகிறது.**

'ஒரு கதை சொல்லுங்களேன்' என்றாள்.

இந்த நிலையில் கதை சொல்லத்தான் தோன்றுமா? எத்தனையோ ஆயிரமாயிரங் கதைகளை வாசித்த எனக்கு ஒன்றாவது ஞாபகத்திற்கு வந்தால்தானே! பிறகு எங்கோ என்றோ படித்த ஞாபகம் தட்டியது.

'காதலி காதலனைக் கதை கூறும்படி கேட்கிறாள். காதலன் தம்மிருவருக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் காதலை வேறு இருவர் தலைமேல் போட்டுக் கூறிவிடுகிறான்.'

அதேபோல அவள்மேல் எனக்கு ஏற்பட்டிருக்கும் காதலைக் கதையாக வைத்துக்கட்டினேன். உண்மையை எப்படியோ அறிந்துவிட்டாள். கதைமுடிவில் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். வெட்கத்தால் முகம் அப்படியே சிவந்துவிட்டது. இதழ்களுக்கிடையில் ஒரு முறுவல் நெளிந்தது. அவள் இதழ்களில் என் இதழ்களைப் பொருத்தக் குனிந்தேன்....?

புகையிரதம் ஓர் குலுக்கு குலுக்கி இழுத்தது. என் மனோரதம் தடைப்பட்டது. கண்களை விழித்தேன். அவளும் விழித்தாள். கண்கள் சந்தித்தன. பெண்கள் வாயால்மாத்திரம் பேசுபவர்களில்லையென்பதை அறிந்தேன் அன்று.

அவள் ஸ்ரீபாதத்தைநோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். நான் என் இன்ப ஸ்ரீயின் பாதத்தைத் தொடர்ந்தேன். மலைச்சிகரத்தில் நல்ல நிலவு காய்ந்துகொண்டிருந்தது. ஆனால் குளிர் தாங்க முடியவில்லை. பல்லும் பல்லும் கட கட என்று அடிக்கத் தொடங்கிவிட்டது. போதி மரநிழலில் போதம் தெளிந்த பெருமான் அடிச்சுவட்டைக்கண்டு ஆனந்தங்கொண்டாள் அவளும் அவள் பாட்டியும்.

மெல்ல மெல்லக் கீழே வந்தோம். பாட்டியைக் கையில் பிடித்துக்கொண்டு சமத்தாக இறங்கினாள். நானும் அவர்கள் பின்னே வந்து கொண்டிருந்தேன். பாட்டிக்கு கால் தவறியது கீழே! கீழே இருவரும் உருண்டு அடிபட்டுச் சாகவேண்டியதுதான். எட்டிப்பிடித்தேன். அவள் கரம் அகப்பட்டது. அப்படியே இருவரையும் அணைத்துப் பிடித்துக்கொண்டேன். அவள் கை பனிக்கட்டியைப் போலக் குளிர்ந்தது 'போமஸ்துதி' என்றால் பாட்டி. பிறகு சாது! சாது! என்று முணுமுணுத்துக்கொண்டே கீழ் இறங்கத் தொடங்கினாள். நன்றி நிரம்பிய கண்களோடு என்னைப் பார்த்துக்கொண்டு நின்றாள் அவள். அவ்வளவுதான்.

அலுப்புத் தீர்த்துக்கொள்ள அருகேயிருந்த அம்பலத்தில் படுத்துக்கொண்டாள் பாட்டி. நான் அருகில் ஓர் வெளியான இடத்தில் சமுக்காளத்தை விரித்துப் புகை குடித்துக்கொண்டிருந்தேன். நடு இரவு; எல்லோரும் தூங்கிவிட்டார்கள். எங்கும் ஒரே அமைதி. கண்ணுக்கெட்டிய தூரம்வரை என் கண்கள் பலமுறை சுற்றிவிட்டன. கைதேர்ந்த ஓவியன்வரைந்துவிட்ட மாதிரியிருந்தது மலைப்பக்கம். மனம் தேன் எடுக்கும் வண்டு பூவை வட்டமிடுவதைப் போல அவளை வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

அடிமேல் அடிவைத்து என் பின்னால் யாரோ வருவதைப்போல் தோன்றிற்று. திரும்பினேன். அவள் வந்துகொண்டிருந்தாள். 'கொஞ்சம் தேநீர் சாப்பிடுகிறீர்களா?' என்று சொல்லிக் கொண்டே ஓர் கிளாஸ் தேநீரை என்முன்னால் வைத்தாள். 'இல்லை, ஏன் இந்தச் சிரமம்' என்றேன். 'இதில் என்ன சிரமம். குளிர்தான் தாங்க முடியவில்லையே. கொஞ்சம் சாப்பிட்டால் உஷாராயிருக்குமே!' என்றாள். 'சரி, இப்படி உட்கார்' என்றேன். சிறிதுதூரத்தில் உட்கார்ந்தாள். தேநீரைக் கையில் எடுத்தேன். கண்கள் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தன. தேநீர் குடிப்பதையும் மறந்துவிட்டேன். 'தேநீர். குளிர்ந்துவிடுமே! அதைப் பருகுங்கள் முதலில்; பிறகு உங்கள் கண்கள் வேண்டுமென்றால் என் அழகைப் பருகட்டும்' என்றாள் குறும்பாக. சந்தர்ப்பத்தை நழுவவிடாது 'உன் இதழ்... தவங்கிடக்கிறேனே' என்று இழுத்தேன். வெட்கத்தால் முகம் சிவந்தது.

'நீங்கள் தமிழன்!, நான் சிங்களத்தி!'

'அப்படியென்றால் என்ன? காதலுக்கு ஜாதி, மதம், உயர்வு தாழ்வு என்ற பேதம் உண்டோ?'

'சகோதர பான்மையோடு நடந்த எங்களை வெறுத்துத் தமிழன் வேறு, சிங்களவன் வேறு, ஐம்பதுக்கைம்பது கொடு' என்று கோஷமிட்டாரே உங்கள் தலைவர்? பிறகு எங்களுக்கிடையில் பிணைப்பு எப்படி ஏற்படும்?

'அவற்றை விட்டுத் தள்ளு! எனக்கு வேண்டியது உனது காதல்!'

'உங்கள் தமிழ்ச் சமுகம் உங்களைப் புறக்கணித்துவிடுமே!'

'யார் புறக்கணித்துமென்ன? நீ என் அருகிருந்தால்'

'இளமையின் மிடுக்கு இப்போ பேசுகிறது! பிறகு....'

'பிறகு என்ன?'

'பிறகு என்னவா? குடித்துவிட்டு எறியப்பட்ட பிழாவைப்போலக் கிடந்து உக்கவேண்டியதுதான்!'

'இவ்வளவு மதிப்புத்தானா என் காதலுக்கு! அதோ அந்தச் சாதுவின் பாதத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன்; உன் மேல் ஏற்பட்டிருக்கும் காதல் என்றும் அழியாது! அது தூய்மையானது!'

'அந்தச் சாது தன் அருமை மனைவியை ஏமாற்றியதுபோல் ஏமாற்றமாட்டீர்களே?' என்று சொல்லிக்கொண்டு சிறிது நெருங்கி உட்கார்ந்தாள்.

எஞ்சியிருந்த தேநீரைப் பருகிவிட்டு அவள் தளிர்க் கரங்களை என் கைகளில் எடுத்தேன். பிடியினின்றும் விடுவித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. இருதயம் வேகமாக அடித்துக் கொண்டதை அவள் பருத்த மார்பு காட்டிற்று. 'தமிழர், சிங்களவர் என்ற பேதம் ஒழியவேண்டுமென்றால் கலப்புமணம் சட்டப்படி கட்டாயமாக்கப்படவேண்டும். என்று சட்டமாக்கப்படுகின்றதோ அன்றுதான் இலங்கைக்குக் கதிமோட்சம்!' என்றேன்.

'அப்படியென்றால் இரு சாதியினரின் ஒற்றுமைக்கும் இலங்கையின் விடிவுக்கும் நாமே இன்று அஸ்திவாரமிட்டவராவோம்' என்று சொல்லிக்கொண்டே என் தோள்மேல் சாய்ந்து கொண்டாள்! ஊசலாடிக்கொண்டிருந்த மயிர்க் கற்றையைச் சரிப்படுத்திக்கொண்டிருந்தது.

பிறகு பொழுது புலர்ந்தது. ★

(1947), (நன்றி: ஈழகேசரிச் சிறுகதைகள்)

# நான் வேறு, நீ வேறு என்ற எண்ணமே சுயநலத்தை எமக்குள்ளே தூண்டுகிறது

இலங்கையை எரித்ததும் அனுமன் அரக்கிகளைக் கொல்ல முயன்றார். சீதை 'அவர்களைக் கொல்லாதே, மன்னித்து விடு' என்று கூறி, 'ந கஸ்சித் நாபராத்யதி' 'தவறு செய்யாதவர்கள் யாருமில்லை' என்பதை அவருக்கு உணர்த்தினார். தவறுவது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வ குணம்.



சிலுவையில் அறையப்பட்டதும் யேசு, ''பரமபிதாவே! இவர்களை மன்னியுங்கள். இவர்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாதவர்கள்'' என்றார்.

சீதாதேவியும் யேசுவும் பிறரின் தவறுகளை உணர்ந்திருந்தார்கள். ஆனாலும் அவர்களை மன்னிக்கவேண்டும் என்றார்கள். அன்னை ஸ்ரீசாரதாதேவியோ ஒரு படி மேலே சென்று, ''பிறரிடம் குற்றம் காணாதே. இந்த உலகத்தை உன்னுடையதாக்கு. உலகில் யாருமே அந்நியரல்லர்'' என்று பறைசாற்றுகிறார்.

அன்னையின் இந்த உபதேசத்தில் ஓர் ஆழ்ந்த மனோதத்துவக் கருத்து உள்ளது. நாம் பிறரிடம் குறைகளை ஏன் காண்கிறோம்? ஏனெனில் அவை குறைகள் என்று ஏற்கனவே நமக்குத் தெரிந்திருப்பதால்தான். ஒரு பொருள் சிவப்பு நிறமுடையது என்று நாம் எப்படிச் சொல்கிறோம்? ஏனெனில் சிவப்பு என்பது என்ன நிறம் என்று நமக்கு ஏற்கனவே தெரிந்திருப்பதால்தான்.

ஒரு செயலைக் குறையாகக் காண்பது அக்குறையுடன் நமக்குப் பரிச்சயம் இருப்பதால்தான். உள்ளே இருக்கும் குறை வெளியே நிகழும் குறையைக் கண்டுபிடிக்கக் கருவியாக உள்ளது.

பிறரிடமுள்ள குறைகளை நீக்குவது என்பது நம் வசப்பட்டதல்ல. நமது குறைகளையே குறைத்துக்கொள்வது நம் வசப்பட்ட செயல். உள்ளேயும் வெளியேயும் குறை காணாமல் இருந்தால் நம்முள்ளே தூய்மையும் ஆனந்தமும் நிறைந்திருக்கும். அன்னையின் ஆய்வு இன்னும் ஆழமானது. அவர் குறை காணும் குணம் எவ்வாறு மனிதனில் எழுகிறது என்பதையும் விளக்குகிறார்.

நாம் பிறரிடமிருந்து வேறுபட்டவர் என நினைக்கிறோம். 'நானும் நீயும் வேறு'. நானும் மற்றவர்களும் வேறு உலகம் என்னிலிருந்து வேறுபட்டது. இறைவனும் நானும் வேறு' என்றுதான் நாம் அனைவரும் நினைக்கிறோம்.

இவ்வேற்றுமை எண்ணமே பிரச்சினைகளுக்குக் காரணம். அது நம் உணர்ச்சி, பேச்சு, செயல் ஆகியவற்றைச் சுயநலத்துக்காகச் செயற்படத் தூண்டுகிறது. அது கோபம், பேராசை போன்றவற்றை நம்மில் உருவாக்குகிறது.

'உன் அண்டை வீட்டுக்காரனை நேசி' என்று பெரியோர் அறிவுறுத்துவர். ஏனெனில் அவனுக்கும் உனக்குமிடையில் வேறுபாடு இல்லை.

நாம் அனைவரும் பிரம்மம் என்ற ஒரே மகத்தான மூலத்திலிருந்து வந்திருக்கிறோம். பலவிதமான பெயர்களிலும் உருவங்களிலும் பொதிந் ஒரே பேருண்மைதான்.



நமது விரல்களைப் பாருகள். அவற்றை நாம் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதென்று நினைப்பதில்லை. அவை யெல்லா ஒருமைப்பாட்டுடன் ஒருங்கே செயற்படுவதே கை.

இந்த உண்மையைத் தா அன்னை, 'யாரும் அன்னியரல்லர்' என்று கூறியதன் மூலம் நமக்கு உணர்த்துகிறார். நாம் தான் அனைவரும். உலகம் முழுவதும் ஒன்று. அதுதான் நீ.

இவ்வுலகில் நாம் அடக்கம். ஆகையால் அதை வெற்றிகொள்வது என்ற கேள்வியே இல்லை. உலகத்துடன் நாம் தொடர்புகொள்ளும்போது உண்மையில் நம்முடனேயே தான் தொடர்பு கொள்கிறோம். பிறருடன் அல்ல. பிறர் என்று யாருமே இல்லை. ஸ்ரீசாரதாதேவியின் வாழ்க்கை முழுவதிலும் இந்தச் சநாதன சமதர்ம தத்துவத்தின் பிரதிபலிப்பு மட்டும் தான் தெரிந்தது.

உலகைக் கண்ணாடியாக நினைத்து அதில் நம்மையே காண முடியுமானால், நமது பிறப்புரிமையான ஞானத்தையும் ஆனந்தத்தையும் நாம் பெறுவதில் எந்தத் தடையும் இருக்காது என்பதுதான் அன்னை நமக்கெல்லாம் வழங்கியுள்ள அற்புதமான செய்தி.

(நன்றி: ஸ்ரீராமகிருஸ்ண விஜயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி முன்பள்ளிகளுக்கு சத்துணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக்.28

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கென சத்துணவுப் பொருள்கள் போரூட் நிறுவனத்தால் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

சகல முன்பள்ளி ஆசிரியர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வருகைதந்து பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலர் சி.வே.குலநாயகம் கேட்டுள்ளார். (202)

## கண்ணீர் அஞ்சலி

*தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் கடமைபுரியும்*

**பொ.விஜேந்திரன்**

*அவர்களின் அன்புத் தாயார்*

**அமரர் பொன்னுத்துரை சரஸ்வதி**

*அவர்கள் இயற்கை அடைந்ததையிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வட பிராந்திய ஊழியர் தொழிற்சங்கத்தினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.*

(67351) **நிர்வாகத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**தோற்றம்**
12 ★ 08 ★ 1925

**மறைவு**
28 ★ 09 ★ 2007

**திருமதி பொன்னுத்துரை சரஸ்வதி**

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச்செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவிகள் புரிந்து எமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

இன்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை (ஆலடி),*
*சுன்னாகம்.* (67284)

*நீங்கா நினைவுடன்:*
**குடும்பத்தினர்.**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
30 ★ 06 ★ 1975



**உதிர்வு**
28 ★ 10 ★ 2003

செல்வன் **சோதிலிங்கம் திருக்குமார்** *(திரு)*

**அகிலத்தில் எம்மையெல்லாம் ஆறாத் துயரமதில் ஆழ்த்திவிட்டு**
**நீ சென்று மறைந்ததேனோ?**
**நீ இல்லையென்று நாள்தோறும்**
**உன் நினைவில் மூழ்கியிருப்பதனால்**
**என்றும் எம் உள்ளத்தில் வாழும் உன் உருவம்**
**ஒருமுறைதான் முன்னாலே வந்தால்தான் ஆகாதோ**
**என்று நாம் ஏங்கி இரு விழிநீர் சொரிந்து நிற்க**
**வானுலகைவிட்டு இங்கே வராதிருப்பதேனோ?**
**வரும் வழியை விழி பார்த்து ஏங்கி நாம்**
**இங்கிருந்து அரன் பாதம் தொழுகின்றோம்**
**அவன் நிழலில் உன் ஆத்மா**
**என்றும் சாந்திபெற்று**
**நீங்காது வாழ்ந்திருக்க....**
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி/54110)

சிவப்பிரகாச வித்தியாசாலை,
வல்லை வீதி, சங்கானை.

*நீங்கா நினைவுகளுடன்:*
**அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரி, மருமகன்.**

## தவறிவிட்டது

*மீசாலை கிழக்கு, மீசாலையைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சந்திரகுமார் என்பவருடைய தே.அ.அ. (772333412V), மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் என்பன மீசாலைக்கும் சாவகச்சேரி சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும்.*

**பிரகாஸ் டெக்ஸ்டைல், சாவகச்சேரி.** (67257)

## ஒத்துமாறல்

கண்டி மாவட்ட தேசிய பாடசாலையில் தமிழ் பாட ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ். மாவட்ட பாடசாலையில் உள்ள ஓர் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

**சோதிநாதன் சுகந்தன்,**
கோகுல வீதி, அன்னங்கை, கோண்டாவில் வடக்கு *(நாயசி மில்)*
தொடர்பு: 0779785759.

## பணிநிலை வெற்றிடம்

கணனி பழுது பார்த்தல், அசெம்பிளிங், சொப்ட் வெயார், வெப் டிசைனிங் மற்றும் கற்பித்தல், My Computer வெளியீடு இணைய சேவைகளை வழங்கும் எமது கணனி நிறுவனத்திற்கு

*அலுவலக/ தொழில்நுட்ப உதவியாளர்கள்
*சஞ்சிகை விநியோகிப்பாளர்கள் தேவை.

யாழ்./நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் வசிப்போர், மோட்டார் வண்டி வைத்திருப்போர் (சஞ்சிகை விநியோகிப்பாளர்), தொலைபேசி வைத்திருப்போர் விரும்பத்தக்கது.

நேர்முகத் தேர்வு: திங்கள் - செவ்வாய் (29-30) 9மணி - 1மணி வரை மட்டும்.

**SPEED IT net** "The Quick Way to Online"
*72/28 பணிக்கர் லேன், பலாலி வீதி,*
(உயர்தொழில்நுட்ப நிறுவகம் அருகில்), *திருநெல்வேலி.*
தொ.பே.: 0214-591871, 0777 563213.

## ஆஸ்பத்திரி மற்றும் ....

( 05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஊரடங்கு நேரத்தையொட்டி பி.ப. 4 மணியுடன் பயணிகள் வாகன சேவைகள் யாழ்.பஸ் நிலையத்தில் நிறுத்தப்படுகின்றன. இதனால் கடைசி பஸ்ஸைப் பிடிப்பதற்கு குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னர் அலுவலகங்களிலிருந்து புறப்பட வேண்டிய நிலை அலுவலகர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வேளையில் பாதைமறிப்பு இடம்பெற்றால் இடைவழியில் தங்கவேண்டிய அவலநிலை ஏற்படுகிறது.

வாகனத் தொடரணி புறப்பட ஆயத்தம் செய்யப்பட்டதும் பாதை மறிப்பு இடம்பெறுகிறது. இவ்வேளையில் குறுக்கு ஒழுங்கையிலிருந்து ஏ -9 வீதிக்கு உட்செல்வது, அல்லது ஒரு ஒழுங்கையிலிருந்து மற்றொரு ஒழுங்கைக்கு ஏ -9 வீதியைக் கடப்பது தடை செய்யப்படுவதால் பாதிப்புறுவோரும் பலரே. அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்செல்வோர், பொருள்கள் வாங்க சந்தைக்கு, கடைக்குச் செல்வோர் பாதைமறிப்பு தடை நீங்கும் வரை அந்தந்த இடங்களில் நிற்கவேண்டியுள்ளது.

வாகனத் தொடரணி என்கின்ற போதிலும் தொடர்ச்சியாக வீதிகளில் வாகனங்கள் வருவதில்லை. பாதைமறிக்கப்பட்டு 15-20 நிமிடங்களுக்குப் பின்னர் முதல் வாகனத்தொடரணி வரும். மற்ற வாகனத் தொடரணி 15-30 நிமிடங்களுக் குப் பின்னர் வீதியில் செல்லும். இவ்வாறு கடைசி வாகனத் தொடரணி சென்று முடியும் வரை பொது மக்கள் எவரும் உள்நுழையவோ வீதியைக் கடக்கவோ முடியாது. தொடரணி இடை வெளி ஏற்படும் வேளையில் பொதுமக்களை (நடந்தும், சைக் கிள், மோட்டார் சைக் கிள் ஆகிய வற்றில் செவ்வோரும்) வீதியினைக் கடக்க அனுமதித்தால் பலரின் கஷ்டங்கள் குறைய வாய்ப்புள்ளது.

அனைத்துத் தேவைக்கும் பொது மக்கள் வீதிக்குச் செல்வதால் அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவகையில் வாகனத் தொடரணிகளை நடத்தினால் அனைவரும் நன்றியுடையவர்களாக இருப்பர். ★

## யோகம் தரும் இயற்கை வைத்தியம்

*பல சிகிச்சைகள், வைத்தியசாலைகளால் கைவிடப்பட்ட பல நோயாளர்கள் குணமடைய வைக்கப்பட்டுள்ளனர்.*

*மாறாத தலை விறைப்பு, தலையிடி, தலைச்சுற்று, தலை அம்மல், மறதி, நித்திரையின்மை, மூச்சுத்திணறல், இழுப்பு, கழுத்துப்பிடிப்பு, உளைவு, கைக்குத்து வேதனை, முதுகுவலி, முதுகு வளைக்க இயலாமை, முதுகு விட்டு விட்டுக் குத்துதல், மூட்டுக்கள் தேய்மானம், நெஞ்சுவலி, மன இறுக்கம், வயிற்றுப் போக்கின்மை, வயிறு இறுக்கம், ஊதல், மலம்கறுப்புநிறமாதல், சமிபாடின்மை, கால் விறைப்பு, தசைப்பிடிப்பு இன்னும் பல நோய்களைக் குணமாக்கும் அதிசய சிகிச்சை.*

T.P.: 0779112969,
0776244880 (67345)

**ரெய்கி யோகாவைத்தியம்**
**சாரையடி, பருத்தித்துறை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த*
**யா/மானிப்பாய் சென் ஆன்ஸ் றோ.க.த.பாடசாலை** *மாணவன்*
**செல்வன் அருட்செல்வம் லக்ஷன்**
*மேலும் பல சிறப்புகள் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் வாழ்த்துகின்றோம்.*

*கலாமன்ற வீதி,*
*மானிப்பாய் கிழக்கு,*
*மானிப்பாய்.*

**அன்பு உள்ளங்கள்.**

(67340)

## அரசாங்க பெறுகை அறிவித்தல்
## சலவைச் சேவை -2008
## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

2008 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்கு சலவைச் சேவை வழங்குவதற்கான பெறுகைகள் கோரப்படுகின்றன. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் பெறுகைப் படிவங்களை உரிய பெறுகைப்பத்திரப் பணம் 100/= செலுத்தி 2007/12/06 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகைகள் 2007/12/07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

பெறுகைகள் சீல் வைத்த உறையிலிட்டு பெறுகை விவரம் எழுதப்பட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

வேறு விவரங்கள் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ள முடியும். நிர்ணயிக்கப்பட்ட வீதங்களுக்கு மேலாக கேட்கப்படும் பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

01. ஆதார வைத்தியசாலை- பருத்தித்துறை
02. மாவட்ட வைத்தியசாலை -தெல்லிப்பழை
03. மாவட்ட வைத்தியசாலை -ஊர்காவற்றுறை
04. மாவட்ட வைத்தியசாலை -நெடுந்தீவு
05. மாவட்ட வைத்தியசாலை -வல்வெட்டித்துறை
06. மாவட்ட வைத்தியசாலை -புங்குடுதீவு
07. மாவட்ட வைத்தியசாலை -சாவகச்சேரி
08. சுற்றயல் கூறு -அச்சுவேலி
09. சுற்றயல் கூறு -சங்கானை
10. சுற்றயல் கூறு -கோப்பாய்
11. சுற்றயல் கூறு -அனலைதீவு
12. சுற்றயல் கூறு -காரைநகர்
13. சுற்றயல் கூறு -நயினாதீவு
14. கிராமிய வைத்தியசாலை -வேலணை
15. கிராமிய வைத்தியசாலை -வட்டுக்கோட்டை
16 கிராமிய வைத்தியசாலை -பண்டத்தரிப்பு
17. கிராமிய வைத்தியசாலை -மருதங்கேணி
18. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -வரணி
19. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -கொடிகாமம்
20. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -குருநகர்
21. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -அளவெட்டி
22. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -கோண்டாவில்
23. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -கரவெட்டி
24. மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் -மானிப்பாய்
25. மத்திய மருந்தகம் -சுன்னாகம்
26. மத்திய மருந்தகம் -கொக்குவில்
27. மத்திய மருந்தகம் -இணுவில்
28. மத்திய மருந்தகம் -பருத்தித்துறை
29. மத்திய மருந்தகம் -புன்னாலைக்கட்டுவன்
30. மத்திய மருந்தகம் -புத்தூர்
31. மத்திய மருந்தகம் -உடுவில்
32. மத்திய மருந்தகம் -உரும்பிராய்
33. மத்திய மருந்தகம் -வட்டுக்கோட்டை
34. மத்திய மருந்தகம் -இளவாலை
35. மத்திய மருந்தகம் -கைதடி
36. மத்திய மருந்தகம் -ஏழாலை
37. மார்புச் நோய்ச் சிகிச்சை நிலையம் -யாழ்ப்பாணம்

(சி/54129)

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்.**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியை ஆண்ட மாவீர மன்னன் பண்டாரவன்னியனின் தோல்வி நாளை நினைவு நாளாகக் கொள்வது தகுமா...?



நெற்றியில் நிலைத்த நீறும்
நீள்கரம் பிடித்த வாளும்
வெற்றியைக் குறித்த நோக்கும்,
வீரத்தை விளைத்த நெஞ்சும்
உற்றவெம் பகையை வென்று
உயர்கொடி யுடன் அடங்காப்
பற்றினை ஆண்ட வீரப்
பண்டார வன்னித் தோற்றம்.

தோற்றலும் வெற்றிப் பாதை
தொடர்வதும் உலக நீதி.
ஆற்றலும் புகழும் பண்பும்
அவனியில் நிலைத்து நிற்கும்
காற்றிலா விடினும் வாழ்வோங்
கனவிலும் அடிமைத் தாழ்வை
ஏற்றிடோம் எனப்போர் செய்த
ஏந்தல் பண்டார வன்னி

**பண்டாரவன்னியன் நினைவுதினம் மாற்றப்பட வேண்டும்**

ஒக்ரோபர் 31 ஆம் திகதி பண்டார வன்னியன் நினைவு தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது; பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 31 ஆம் திகதி பண்டாரவன்னியன் பிறந்த தினமோ இறந்த தினமோ அல்ல. "பிரித்தானியப் படைகள் பண்டாரவன்னியனைத் தோற்கடித்த தினமே ஒக்ரோபர் 31"

1803 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி முல்லைத்தீவிலுள்ள கற்சிலைமடு என்ற இடத்தில் பிரித்தானியப் படைகளுக்கும், பண்டாரவன்னியனின் படைகளுக்குமிடையே கடும் மோதல் நிகழ்ந்தது. 1803 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு பிரிட்டிஷ் படைகள் பண்டாரவன்னியன் மீது மும்முனைத் தாக்குதல் தொடுத்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து தளபதி ஜோன் யுவெலின் தலைமையில் சென்ற படைகளும், மன்னாரிலிருந்து கப்டன் வொன் டிறிபேர்க்கின் தலைமையில் சென்ற படைகளும் திருகோணமலையிலிருந்து கப்டன் வுட்வேட் என்பவரின் தலைமையில் சென்ற படைகளும் ஒரே வேளையில் பண்டாரவன்னியன் மீது தாக்குதலைத் தொடுத்தன. இந்தப் போரில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட இடத்தில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதை நினைவுகூரும் முகமாக நடுகல் ஒன்றை ஆங்கிலேயர்கள் நாட்டியுள்ளனர். பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட தினமே பண்டாரவன்னியன் நினைவு தினமாக நினைவுகூரப்பட்டுவருகிறது.

ஒரு மாவீரனை அவன் தோல்வியடைந்த தினத்தில் நினைவு கூர்வது பொருத்தமானதா?

யாழ்ப்பாணம், கண்டி, கோட்டே என இலங்கை மூன்று இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டு மூன்று அரசர்களால் ஆளப்பட்ட வரலாறு அனேகமாக எல்லோருக்கும் தெரிந்ததே. இந்த மூன்று அரசர்களை விட வன்னியர்கள் என்ற குறுநில மன்னர்களும் வன்னியை ஆண்டு வந்தனர். இவர்கள் ஒரு சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண இராச்சியத்துடன் இணக்கமின்றி சுயமாகவும் வன்னியை ஆட்சி புரிந்து வந்தனர். இந்த வன்னியர்களின் வரிசையில் வந்த, வன்னியை ஆண்ட கடைசி மன்னன் பண்டாரவன்னியன்.

1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கீசரிடம் வீழ்ச்சியடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் 1621 ஆம் ஆண்டே யாழ்ப்பாணம் போர்த்துக்கீசரின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிட்டதாகவும் சில வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்படுவதற்கு முன்னரே கோட்டே மன்னன் மதம் மாறி டொன் யுவான் தர்மபாலன் என்ற பெயரில் போர்த்துக்கீசரின் ஆசியுடன் ஆட்சி புரிந்தான்.

**வன்னி மக்கள் அடிபணிய மறுத்தனர்**

யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கீசர் கைப்பற்றியவுடன், மன்னார் முதல் யாழ்ப்பாணம் வரை - வவுனியா உட்பட - தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டதாக அவர்கள் எண்ணினர். ஆனால் வன்னியை ஆட்சிசெய்து வந்த வன்னியர்கள் போர்த்துக்கீசருக்குக் கீழ்ப்படிய மறுத்தனர். திறை செலுத்த மறுத்தனர்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு அடங்கிய 2000 சதுர மைல் நிலப்பரப்பே வன்னி இராச்சியம் என அழைக்கப்பட்ட பிரதேசமாகும். வன்னியர்கள் சில சமயங்களில் பொலன்றுவையையும் ஆட்சிபுரிந்ததாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

**1803 இல் பிரிட்டிஷாரிடமே வன்னி வீழ்ந்தது**

யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சி அடைந்து 150 அல்லது 180 ஆண்டுகளின் பின்னரே வன்னி இராச்சியம் அந்நியர் வசமானது. போர்த்துக்கீசராலும் அதன்பின் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தராலும் வன்னி இராச்சியத்தையும், கண்டி இராச்சியத்தையும் கைப்பற்ற முடியவில்லை! இறுதியாக இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர்களே 1803 ஆம் ஆண்டு வன்னியைக் கைப்பற்றினர்.

வன்னியை ஆண்ட கடைசி மன்னன் பண்டாரவன்னியன். இவன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பெரும் தலையிடியாக விளங்கினான். அவ்வப்போது பிரித்தானியப் படைகள் மீது தாக்குதல் நடத்தி பிரிட்டிஷ் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தான்.

**பண்டாரவன்னியனின் பிரசித்தமான தாக்குதல்**

பண்டார வன்னியன் நடத்திய தாக்குதல்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியது 1803 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி முல்லைத்தீவில் நடத்திய தாக்குதல்.

1803 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 25 ஆம் திகதி முல்லைத்தீவிலிருந்த அரசாங்க இல்லத்தைத் தாக்கி கப்டன் வொன்டிறிபேர்க்கின் (Captain Von Driberg) தலைமையிலிருந்த படையைப் பின்வாங்கச் செய்தான் பண்டாரவன்னியன்.

கப்டன் டிறிபேர்க் யாழ்ப்பாணத்திலிருந்து உதவிக்குச் சென்ற வள்ளத்தில் ஏறித் தப்பினான். இதே கப்டன் டிறிபேர்க்தான் பின்னர் பெரும் படையுடன் வந்து பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான். அதற்குப் பரிசாக பிரித்தானிய அரசு பண்டாரிக்குளம் பிரதேசத்தைக் கப்டன் டிறிபேர்க்கிற்கு அன்பளிப்பாக வழங்கியது. 1865 ஆம் ஆண்டுவரை கப்டன் டிறிபேர்க்கின் உறவினர்களின் பராமரிப்பிலேயே பண்டாரிக்குளம் பிரதேசம் இருந்தது.

## போர்த்துக்கீசராலும் ஒல்லாந்தராலும் வெல்ல முடியாதிருந்த வன்னி அரசு

இலங்கை அரசாங்கம் பண்டாரவன்னியனை தேசிய வீரனாகக் கௌரவித்துள்ளது. பண்டாரவன்னியனின் சிலை திறப்பு விழாவிற்கு அப்போது பிரதமராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் பதவி வகித்த பிரேமதாச அனுப்பிய ஆசிச் செய்தியில் கெப்பிட்டிப் பொலநிகாவை, வீரபுரான்அப்பு போன்ற சிங்கள தேசிய வீரர்களின் வரிசையில் பண்டாரவன்னியனையும் சேர்த்துள்ளார்.

சிங்கள ஆட்சியாளர்களும் இலங்கை அரசாங்கமும் மதிப்பளித்து கௌரவித்த - சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியம் என வர்ணிக்கப்பட்ட - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சவாலாக விளங்கிய ஒரு மாவீர மன்னனை அவன் தோற்கடிக்கப்பட்ட நாளில் நினைவுகூருவது பொருத்தமானதா? அவன் பிரிட்டிஷ் படைகளை விரட்டியடித்த ஒகஸ்ட் 25 ஆம் திகதி பண்டாரவன்னியனை நினைவு கூருவதே பொருத்தமானது.

★ ந.பரமேஸ்வரன்

# ஷேன் வோர்னின் சாதனையை ஆஸ்திரேலியாவிலேயே முறியடிக்க காத்திருக்கிறார் முரளிதரன்





ஆஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக கொழும்பிலிருந்து புறப்பட்ட இலங்கை அணி ஆஸ்திரேலியா சென்றடைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ள இலங்கை அணி அடிலெய்டில் 3 நாள் பயிற்சி ஆட்டம் ஒன்றில் விளையாடுகிறது.

அதனைத் தொடர்ந்து நவம்பர் 8ஆம் திகதி இலங்கை - ஆஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் பிரிஸ் பேனில் தொடங்குகிறது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை எட்ட இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு இன்னமும் 9 விக்கெட்டுகளே உள்ளன.

ஷேன் வோர்னின் உலக சாதனையை ஆஸ்திரேலிய மண்ணிலேயே முறியடிக்க முரளிதரனுக்கு ஒரு அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

தடை செய்யப்பட்ட ஆஸ்திரேலிய நடுவர் டேரல் ஹேரால் 'நோபோல்' என்று கூறப்பட்டு, தொடர்ந்து ஆஸ்திரேலிய ரசிகர்களால் கேலிக்குரிய வீரராகப் பார்க்கப்பட்டுவரும் முரளிதரன் - வோர்னின் சாதனையை முறியடிக்க தற்போது கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலிய பயணத்தைத் தவிர்க்குமாறு இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் ரணதுங்க முரளிதரனுக்கு அறிவுரை கூறியிருந்தார்.

ஆனால் அதனை முரளிதரன் நிராகரித்து விட்டு ஆஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சாதனை முறியடிக்கப்படாமல் இருக்க பொண்டிங் திட்டம்**

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வோர்னின் சாதனையை, தனது சொந்த மண்ணில் முறியடிக்காமல் இருக்க திட்டமிட்டுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கிபொன்டிங்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் வோர்ன், டெஸ்ட் போட்டிகளில் 708 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.

அவருக்கு அடுத்த இடத்தில், இலங்கையின் முத்தையா முரளிதரன் 700 விக்கெட்டுகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளார்.

இந்நிலையில், அடுத்தமாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளில் அந்நாட்டு அணிக்கு எதிராக இலங்கை அணி விளையாடவுள்ளது.

இப்போட்டிகளில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிவிட்டால், ஆஸ்திரேலிய வீரர் புரிந்துள்ளச் சாதனையை அவரது நாட்டு மண்ணிலேயே முறியடித்துவிடுவார் முரளிதரன்.

இந்நிலையில், ஆஸ்திரேலிய மண்ணில் முரளிதரனால் வோர்னின் சாதனையை முறியடிக்க முடியாது என்றும், அதற்கேற்றபடி தனது அணியின் [illegible] வீரர்கள் விளையாடுவார்கள் என்றும் [illegible] பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## இந்திய அணிக்கு விரைவில் புதிய பயிற்சியாளர் நியமனம்

**இந்திய அணிக்குப் புதிய பயிற்சியாளர்?**

புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்வதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தீவிர நடவடிக்கை மேற்கொண்டுவரும் நிலையில், அடுத்த வாரத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இதுகுறித்து செயலர் நிரஞ்சன் ஷா செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் "பயிற்சியாளர் தேர்வுக் குழுக் கூட்டம் மும்பையில் நவம்பர் - 3ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது" என்றார்.

இக்கூட்டத்தில் இந்தியக் கிரிக்கெட் அணிக்கு நியமனம் செய்யப்படவுள்ள புதிய பயிற்சியாளர் குறித்து ஆலோசிக்கப்படும் என்று அவர் கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த கிரேக் சப்பல் தனது ஒப்பந்தம் முடிந்தவுடன், அதைப் புதுப்பித்து மீண்டும் அப்பொறுப்பை வகிக்க முன்வரவில்லை. இதையடுத்து, கடந்த 7 மாதங்களாகப் பயிற்சியாளர் இல்லாமலேயே இந்திய அணி இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆக்ரோசமான ஆட்டம் தொடரும் என்கிறார் டோனி**

இந்திய கிரிக்கெட் அணியின் ஆக்ரோஷமான ஆட்டம் தொடரும் என அணித் தலைவர் மகேந்திர சிங் டோனி கூறியுள்ளார்.

20 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்றதற்காக இந்திய அணியின் தலைவர் டோனிக்கு ஆச்சரியமான பரிசு வழங்கப்படும் என ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் மதுகோடா முன்னர் அறிவித்திருந்தார்.

அதன்படி முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்ற பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழாவில் டோனிக்கு [illegible] காரும், 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டது.

இதனைப் பெற்றுக்கொண்டபின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த டோனி கூறியதாவது:

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக மும்பையில் நடைபெற்ற 20 ஓவர் போட்டியில், வெற்றி பெற்றதன் மூலம் நாம்தான் உலக சம்பியன் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

அதிர்ஷ்டத்தால் நாங்கள் உலகக் கிண்ணத்தை வெல்லவில்லை என்பது இதன்மூலம் நிரூபணமாகி இருக்கிறது. தொடர்ந்து இந்திய அணியின் ஆக்ரோஷமான ஆட்டம் தொடரும்.

அணியில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களுமே தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்படுகின்றனர் - இவ்வாறு அவர் கூறினார்.

கராச்சியில் நடைபெறவிருந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் விளையாட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி மறுத்துள்ளதையடுத்து, அப்போட்டியை லாகூரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, அந்நாட்டு அணியுடன் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது. இந்நிலையில், அண்மையில் கராச்சியில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, அந்நகரில் நடைபெறவுள்ள 5ஆவது போட்டியில் விளையாடுவதற்கு தென்னாபிரிக்க அணி மறுத்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஷவுகத் நக்வி கூறுகையில், தென்னாபிரிக்க அணியின் இந்த முடிவு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டும் கராச்சியில் விளையாடுவதற்கு அந்த அணியினர் மறுக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் கடைசிப் போட்டியை லாகூருக்குத் தவிர, வேறெங்கும் மாற்ற இயலாத நிலை உள்ளதாகவும் அவர் கூறினார். ★

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகச் சாலை



### திருவடிப் பெருமை சிந்திப்பரியன

சிவத்திரு சிவ.சண்முகவடிவேல் இந்நூலை எழுதியுள்ளார்.

தோத்திரமும், சாத்திரமும் கைவந்த நூலாசிரியர் 46 அரிய கட்டுரைகளைத் தொகுத்து இந் நூலை எழுதியுள்ளார். இதனை ஆத்மஜோதி தியான மணி மண்டபத்தினர் வெளியிட்டு வைத்துள்ளனர்.

### முருக மந்திரம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளரான சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் முருகனின் பெருமைகளைக் கூறும் நூலாக இதனை எழுதியுள்ளார்.

இந்நநூலை சிவஜோதி வெளியீட்டகத்தினர் வெளியிட்டுள்ளனர்.





### சமாதான ஊடகவியல்

என்னபல் மெக்கோல்ட்ரிக் மற்றும் ஜெக்லின்ச் ஆகிய இருவரும் இணைந்து ஊடகவியல் தொடர்பான இந்நூலை ஆக்கியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரம் இந்நூலை வெளியிட்டு வைத்துள்ளது.

### ஈழத்து தமிழ் நாவல்களிற் சில

40 ஆண்டுகளுக்குரிய ஈழத்துத் தமிழ் நாவல்கள் தொடர்பான திறனாய்வுக் குறிப்புகள் அடங்கிய இந் நூலை பிரபல விமர்சகரும் எழுத்தாளருமான கே.எஸ்.சிவகுமாரன் தொகுத்து வெளியிட்டுள்ளார். இந் நூலை மீரா பதிப்பத்தினர் வெளியிட்டுள்ளனர்.





### மழலைகள் கீத மாலை

கலாபூஷணம், சங்கீத பூஷணம் அ.கி.ஏரம்பமூர்த்தி சிறுவர்களுக்கென இந் நூலை வெளியிட்டுள்ளார்.

36 சிறுவர் பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சிறுவர் படித்து ரசித்து மகிழக்கூடிய கவிதைகள் இந் நூலில் அடங்கியுள்ளன.

### மனிதர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார் எழுதிய 31 சிறுகதைகளின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்று எழுதிய ஈழத்து மூத்த பெண் படைப்பாளியின் இச் சிறுகதைத் தொகுப்பை கிளிநொச்சி கப்டன் வானதி வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது.



## வன்னி மீதான.......

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலுக்கு தலைமை வகித்தவர் திருகோணமலை மாவட்டதைச் சேர்ந்தவர் ஆவார்.

**விமானத் தாக்குதல்கள் கப்பல் அழிப்புகளுக்கு பதிலடி இது**

விடுதலைப் புலிகளின் பகுதிகள் மீதான விமானத் தாக்குதல்கள் மற்றும் விநியோக கப்பல்கள் மீதான தாக்குதல்களுக்கு பதிலடியாகவே அவர்கள் இத்தாக்குதலை நடத்தியிருந்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்புச் சபையை மகிந்த கூட்டியிருந்தார். அதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட படைத் தளபதிகள் மற்றும் உயரதிகாரிகள் கலந்கொண்டனர்.

எனினும் இராணுவத் தளபதியும், கடற்படைத் தளபதியும் நாட்டில் இருக்கவில்லை. விமானப் படைத் தளபதியையும் அவரது படையினரையும் கடுமையாக சாடிய மகிந்த, கோத்தபாயாவை உடனடியாக அநுராதபுரம் செல்லுமாறும் பணித்திருந்தார்.

அன்று மாலை காவல்துறை மா அதிபர், வான் படைத்தளபதி ஆகியோருடன் அநுராதபுரம் சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ஷ, தளத்தின் அழிவு களை பார்வையிட்டதுடன் தளத்தின் பொறுப்பை யும் இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தார். பின்னர் இது தொடர்பாக இராணுவத் தளபதிக்கு தொலை பேசியில் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் விமானத்தளம் அவசரமான நிலை மைகளை எதிர்கொள்ளும் தன்மையில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. முகாமைப் பாதுகாப்பதற்கான எந்தப் பயிற்சிகளும், ஒத்திகைகளும் மேற்கொள்ளப்படவும் இல்லை. தாக்குதல் நடைபெற்ற சமயம் காவலில் இருந்த வான்படையின ருக்கு அவசர நிலைமைகளை எதிர்கொள்ளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டிருக்கவிலலை.

முகாம் வெளிப்பகுதி வேலிகளைக் கொண்டிருக்க வில்லை என்பதும் முக்கியமானது. அங்கு பொது மக்களின் நடமாட்டம் சுதந்திரமாக இருந்தது. தளத்தின் புலனாய்வு பிரிவும் தரம் வாய்ந்தது அல்ல.

இராணுவத்தின் அண்மைய தாக்குதல்கள் விடு தலைப் புலிகளின் பலத்தை சிதைத்து விடவில்லை. இத்தாக்குதல் தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் உளவுரனை அதிகரிக்கும் என்பது உண்மை. *

# அமெரிக்க கிறீன் கார்ட் விசாவுக்கு இணையத்தளத்திற்கே விண்ணப்பிக்க வேண்டும்

### ஊடகவியலாளர் மாநாட்டில் ஆலோசகர் கிறீன்

கிறீன் கார்ட் விஸா சீட்டிழுப்புக்கு ஒருதடவையே விண்ணப்பிக்க முடியுமென இலங்கை மற்றும் மாலைதீவுக்கான விஸா சீட்டிழுப்புப் பிரிவின் ஆலோசகர் தோமஸ் கிரீன் தெரிவித்ததுடன், இணையத் தளம் மூலமே விண்ணப்பிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

மேற்படி சீட்டிழுப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த புதன்கிழமை அமெரிக்க நிலையத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இம்மாதம் 3ஆம் திகதி மேற்படி சீட்டிழுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு டிசம்பர் 2ஆம் திகதிவரை விண்ணப்பிக்கமுடியும். உலகளாவிய ரீதியில் இந்த முறை மூலம் 50 ஆயிரம் பேர் அமெரிக்காவுக்குள் குடியேற விஸா அனுமதி வழங்கப்படுகின்றது. இதில் வருடாந்தம் 300 முதல் 400 பேர் வரை இலங்கையருக்கு விஸா அனுமதி கிடைக்கின்றது. எனவே, இறுதித்திகதிவரை விண்ணப்பிப்பதற்குக் காத்திருக்காது விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

ஏனெனில், கணினிமயப்படுத்தப்படும்போது ஏற்படும் காலவிரயத்தால் இந்தச் சீட்டிழுப்புக்கான தகுதி இழக்கப்படுவதைத் தவிர்க்கமுடியும்.

எழுத்து மூலமான விண்ணப்பங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. தனித்து கணினி மூலமே விண்ணப்பிக்க முடியும். இச் சீட்டிழுப்புக்குள் நுழைவதற்கு எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இச்சீட்டிழுப்பை அதிகாரமற்ற பல இணையத்தளங்கள் மேற்கொள்கின்றதாக நாம் அறிகிறோம். எனவே, எமது அதிகாரபூர்வமான **www. Dvlottery. State.gov** என்ற இணையத்தளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கு முக்கியமாக இலங்கைப் பிரஜையாக இருப்பது மட்டுமன்றி, ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் ஆகக் குறைந்தது கணிதம், ஆங்கிலம் மற்றும் தாய்மொழியுட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது ஐந்து வருட தொழில் அனுபவம் இருத்தல் வேண்டும். இதில் இரண்டு வருடம் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி இந்தச் சீட்டிழுப்பு 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சீட்டிழுப்பில் வெற்றிபெறுவோரது விவரம் அடுத்த வருடம் மே - ஜூலைக்கிடையே வெளியிடப்படுவதுடன், அவர்கள் தங்களது விஸா அனுமதிக்கான 750 அமெரிக்கா டொலருடன் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து விஸாவை ஒக்டோபர் மாதத்திற்கு முன் பெறமுடியுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சீட்டிழுப்புக் குறித்த கலந்துரையாடல் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பு 7இல் உள்ள புதிய நகர மண்டபத்தில் மாலை 6 மணிக்கும் 31ஆம் திகதி கண்டியிலுள்ள சம்பத் மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கும், மாலை 4 மணிக்கு பொலநறுவை நகராட்சி மண்டபத்திலும் ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ அதிகாரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

(சி)


# மரண அறிவித்தல்



## செல்வன் Rtr. கனகராசா பிரதீபன்

*(விற்பனை மேற்பார்வையாளர் L.I.C)*

வண்ணார்பண்ணை, கலட்டி, சீனியர் லேனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா பிரதீபன் அவர்கள் 26.10.2007 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் கனகராசா - யோகேஸ்வரி தம்பதியரின் செல்வப்புதல்வனும் பிரசாந்தனின் (செலிங்கோ ஆயுள்காப்புறுதி- யாழ்.கிளை) ஆருயிர் சகோதரனும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா, காலஞ்சென்ற சதாசிவம், திருமதி இராசமணி சதாசிவம் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்புப் பேரனும் யோகராசா தர்மபத்மினி, தர்மராசா ரமாதேவி (ஆஸ்திரேலியா), கணேசராசா (ஜேர்மனி), பத்மநாதன் நாகபூசனி, கணேசலிங்கம் தவமணிதேவி, தணிகாசலம் திலகவதி, மாணிக்கரட்ணம் பத்மாசனி (ஜேர்மனி), மங்களேஸ்வரி, சேகர் கனகபூசனி (U.K) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் ஜோதிவடிவேல் மோகனா (பிரான்ஸ்), ரட்ணவடிவேல், யோகராணி சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகனும் கவிதா (கனடா), தர்சினி (U.K), ரமனுசா, சாயூரன் (ஆஸ்திரேலியா), சுதாமதி, கருணாகரன், சுரேந்திரன், நரேந்திரன் (U.K), அருணன், மயூரன், யமுனா, சிலோஜினி, விபூசிகா, ஹர்சித் (ஜேர்மனி), சேவிதா (U.K) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சன்மினி, கேசவன் (கனடா), விஜயா, ஜெய்சன், ஜோட்சனா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விதானையார் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (67371)

தகவல்: ச.கனகராசா (தந்தை)
(0774411869)


### மகாஜனக் கல்லூரியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.28

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ஐயரத்தினம் நினைவுதினமும் மகாஜனன் நூல் வெளியீடும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில்இடம்பெறவுள்ளன.

அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவம் கலந்து கொள்வார்.

நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வணிகபீட விரிவுரையாளர் ஸ்கந்தவரதர் ரமேஷ் நிகழ்த்துவார்.

மலர் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறைசிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதிதகலா மணி நிர்மலா... (203)


## சனோ கல்வி நிலையம்

*சங்கத்தானை*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிலையத்தில் கல்விகற்று கடந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முதலாம் அணி மாணவர்களான

| | | |
|---|---|---|
| 1. | இ.இராகவி | 170 |
| 2. | சி.கிரிஷிகா | 169 |
| 3. | பே.தர்சன் | 160 |
| 4. | அ.ஜெயசுதன் | 156 |
| 5. | கு.மகிழினி | 145 |
| 6. | இ.நிதர்சிகா | 140 |
| 7. | கோ.டினா | 140 |

ஆகியோர் உட்பட வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களுமாக 19 பேரையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**நிர்வாகத்தினர்.**

* 2008இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கும், தரம் 4 மாணவர்களுக்குமான விசேட பயிற்சிகளுடன் கூடிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

(சி/54143)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் கோபால்

உடுப்பிட்டி, ஆதியாமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கோபால் 26.10.2007 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கலாவதியின் அன்புக் கணவரும் தர்ஷன் (கனடா), றொசான் (ஜேர்மனி), கிஷான் (கனடா), யசிதா (கனடா), அனுஷா (திருமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.11.2007 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

'ஆறுமுக பவனம்',
ஆதியாமலை,
உடுப்பிட்டி.
T.P.: 0212264142
001-416- 2677353 (கனடா).

தகவல்:
சி.ரமேஷ் (பெறாமகன்),
(67389)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# தீர்வுக்கான திட்டம் எதையும் தெற்கு முன்வைக்கவே மாட்டாது

இலங்கைத் தீவை கடந்த ஆறு தசாப்த காலமாக ஆட்டிப் படைத்துவரும் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான நீதி, நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை தென்னிலங்கைச் சிங்கள சமூகம் ஒன்றுபட்டு முன்வைக்கும் என்ற சர்வதேசத்தின் எதிர்பார்ப்பு 'பிள்ளையார் கல்யாணம்' போல நாளை நாளை என்று தள்ளிப் போய்க் கொண்டே இருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நடுநிலை மனதோடு அணுகி நீதி செய்யும் மனப்பக்குவமோ, தீர்க்க தரிசனமான அரசியல் பார்வையோ, சகல இன மக்களையும் ஒன்றிணைக்கும் ஒத்திசைவு நோக்கோ தென்னிலங்கைக் கட்சிகள் இடையே இல்லை என்பதால், நியாயமான தீர்வுத் திட்டம் ஒன்றை அவற்றினால் ஐக்கியப்பட்டு முன்னெடுக்கவே முடியாது என்பதையும்-

அதன் காரணமாகத் தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமைப் போராட்டத்தை முழு அளவில் - முழு மூச்சில் - முன்னெடுப்பதைத் தவிர, ஈழத் தமிழர்களுக்கு வேறு மாற்று வழி ஏதும் இல்லை என்பதையும்-

இப்பத்தியில் திரும்பத் திரும்ப தெளிவாகச் சுட்டிக் காட்டி வந்தோம். அக்கருத்து மென்மேலும் உறுதிப்பட்டு வருவதையே தென்னிலங்கை அரசியல் போக்கு உணர்த்தி நிற்கின்றது.

தாம் ஆட்சிக்கு வந்தால், இனப்பிரச்சினைக்கான தென்னிலங்கையின் தீர்வு யோசனையை மூன்று மாத காலத்துக்குள் பொது இணக்கப்பாட்டுடன் உருவாக்குவார் என்றும் -

அதன் பின்னர் அந்த யோசனைத் திட்டத்தின் அடிப் படையில் தமிழர் தரப்புடன் பேச்சு நடத்தி இணக்கத்துக்கு வருவார் என்றும் -

தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்து அதிகாரத்துக்கு வந்தவர் தென்னிலங்கையின் ஆட்சிப் பீடத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இப்போது அவர் பதவி யேற்று ஏறத்தாழ இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. தென்னிலங்கையில் இணக்கப்பாடு வரவும் இல்லை; தமிழர் தரப்புடன் சமரசப் பேச்சும் முன்நகரவில்லை.

தென்னிலங்கையில் பொது இணக்கப்பாடு ஒன்றைத் தோற்றுவிக்கும் நடவடிக்கை என்ற பெயரில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஒன்றைப் பெரும் ஆரவார அறிவிப்புகளோடு அரசுத் தலைவர் ஸ்தாபித்தார்.

அமைதி வழித் தீர்வில் - சமாதான முயற்சிகளில் - தமக்கு விருப்பமும் ஈடுபாடும் உண்டு என்று சர்வதேச சமூ கத்துக்குக் காட்டும் எத்தனத்துடன் அரசுத் தலைவர் எடுத்த இந்தத் தந்திரோபாய நகர்வின் உட்சூட்சுமம் புரியாமல் - இந்த முயற்சியின் பின்னால் புதைந்து கிடக்கும் குள்ளநரித் தந்திரத்தை அறியாமல் - இந்த எத்தனத்தில் அவிந்து, ஏமாந்து எடுபட்டுப் போனது சர்வதேச சமூகம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்தாபித்துள்ள அனைத்துக் க்ட்சிப் பிரதிநிதிகள் குழு ஓர் ஆக்கபூர்வமான முயற்சி என்றும் -

இந்தக் குழு மூலம் சாதகமான தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் சாத்தியம் கிட்டியிருக்கின்றது என்றும் -

அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் பல இதனை வரவேற்று அறிவிப்பும் விடுத்தன. ஆனால் பலன் ஒன்றுமில்லை. மாதங்கள் கடந்து வருடமும் தாண்டியதுதான் மிச்சம். பொது இணக்கம் வரவேயில்லை.

இந்த வருடம் ஜனவரிக்கு முன்னர் தீர்வுக்கான பொது யோசனையை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு வெளியிடும் என கடந்த வருட இறுதியில் அரசுத் தலைவரே, இந்தியா உட்பட பல சர்வதேச தரப்புகளுக்கு உறுதியளித்திருந்தார். இந்தக் காலக்கெடு பின்னர் கடந்த ஏப்ரல் வரை நீடிக்கப்பட்டது. பின்னர் அது ஓகஸ்ட் வரை பின்போடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு முடிந்தாலும் அத் தகைய இணக்கப்பாடு வராது என்பது இப்போது உறுதி யாகியிருக்கின்றது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு கடந்த செவ்வாயன்று தனது 51 ஆவது கூட்டத்தை நடத்தி முடித்து விட்டது. சந்திப்புகள் அரைச் சதத்தைத் தாண்டியும் பொது இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் குழுவின் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

இனி நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமாகிவிடும். அத்தோடு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, 'யுனெஸ்கோ'வின் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு செல்கின்றார்.

இக்காரணங்களால் குழுவின் கூட்டம் அடுத்த இரண்டு மாதங்களுக்கு இனிமேல் நடக்காது என்பது உறுதியாகியுள்ளது. ஆகவே இந்த ஆண்டு முடிவுவரை இக்குழு இனிக் கூடாது.

ஆக, இந்த ஆண்டு கடந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டுடன் கூடிய யோசனைத் திட்டம் வெளிவராது என்பது இப்போது உறுதி யாகிவிட்டது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வை உதறித் தள்ளி, உதாசீனப்படுத்திவிட்டு, இராணுவ வழித் தீர்வில் தீர்க்கம் கொண்டு, போரியல் போக்கில் யுத்த முனைப்போடு செயற்படும் கொழும்பு அரசுக்கு, அனைத் துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மூலம் ஆக்கபூர்வமான யோசனை ஒன்றை முன்வைக்கும் எண்ணம் கிஞ்சித்தும் கிடையாது.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு மூலம் தமிழருக்கு நியாயம் செய்யும் தீர்வு யோசனைத் திட்டம் ஒன்றை முன்வைப்பதை அரசில் இணைந்திருக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குக் கட்சிகள் கடுமையாக எதிர்க்கின் றன. அரசுத் தரப்பு முதலில் தனக்குள் ஒன்றுபட்டு தீர்வுத் திட்டம் குறித்து பொது நிலைப்பாடு ஒன்றை அறிவிக்கட் டும் என்று நிபந்தனை விதித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் ஏற்கனவே மேற்படி குழுவின் நடவடிக்கைகளிலிருந்து விலகி, ஒதுங்கிவிட்டது.

இந்தப் பின்னணிகளையும், கொழும்பு அரசின் இராணுவத் தீர்வு முனைப்பையும் கவனத்தில் எடுத்து, சர்வதேச சமூகம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அமைதி வழித் தீர்விலேயோ அல்லது அதற்கான நீதி, நியாயமான தீர்வு யோசனை ஒன்றை முன்வைப்பதிலேயோ கொழும்புக்கு நம்பிக்கை இல்லை என்பதை சர்வதேச சமூகம் இன்றைய நிலையில் - இவ்வளவு காலம் கடந்த பின்னராவது - புரிந்து கொண்டு, அதை உணர்ந்து, பகிரங்கப்படுத்த - வெளிப்படுத்த - முன்வரவேண்டும்.

# மக்கள் சேவையில் உயர்ந்து நின்று பொன்விழாக் காணும் அரிமாக் கழகம்

## யாழ்.மாவட்டத்தில் இன்று சிறப்பு விழா



இற்றைக்கு ஏறத்தாழ 87 வருடங்களுக்கு முன் மனிதர்கள் தனியாக செய்ய முடியாதவற்றை இணைந்து நிறைவேற்றுவதன் மூலம் வாழ வழிதெரியாத, வாழ்வதற்கு வசதிகளேதுமற்ற சமுதாயத்தின் கீழ் மட்டத்திலே பஞ்சைகளாய், பாராரிகளாய் வாழ்ந்த மக்களின் துயர்துடைக்க பயந்த மனதை சாந்தி செய்ய, சோகக் கண்ணீரை மாற்ற வீறு கொண்டெழுந்த ஒரு மனிதனின் கனவு இன்று அப்பெருந்தகையின் எண்ணத்திலும் மேலாக விரிந்து வளர்ந்து 146 நாடுகளில் 46,000 கழகங்கள் மூலம்1.4 மில்லியன் அங்கத்தவர்களை இணைத்து நிற்கிறது. ஆம் 1917ஆம் ஆண்டு மெல்வின் ஜோன்ஸ் (Melvin Johns) எனும் சமூக சிந்தையாளரின் கருத்திலே உதித்த சர்வதேச அரிமாக் கழகங்கள் இன்று உலகெங்கும் தமது கிளை பரப்பி சேவையில் உயர்ந்து நிற்கின்றன.

ஒரு சமயத்தையோ இனக்குழுவையோ அன்றேல் அரசியல் தத்துவத்தையோ சாராமல் தொண்டு சேவை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அரிமாக்கள் உலகெங்கும் சேவையாற்றி வருகிறார்கள்.

### பொன்விழா ஆண்டிலே பெருமிதம்

சர்வதேச அரிமாக் கழகங்களின் கிளை ஒன்று இலங்கையில் நடப்பட்டு இந்த வருடத்தோடு ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இந்தப் பொன்விழா ஆண்டிலே இலங்கை மண்ணுக்கு பெருமை சேர்க்கும் வகையில் உலகெங்கும் பரந்து வாழும் 1.4 மில்லியன் அரிமாக்களின் சர்வதேசத் தலைமையை இலங்கை மாதாவின் தவப்புதல்வன் லயன் மகேந்திர அமர சமரசூரிய அவர்கள் அலங்கரிக்கும் பெருமை எமக்கு கிடைத்திருக்கிறது. 197 நாடுகளிலும் சிறிய, எண்ணிக்கையில் குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட எமது பல்மாவட்டம் 306 (Multiple District) பொன்விழா ஆண்டிலே தலைவனைத் தந்து நிமிர்ந்து நிற்கிறது.

### ஆறு மாவட்டங்கள்

1957 இல் ஒரு கழகத்துடன் ஆரம்பமான எமது பயணம், மாவட்டமாகி பின் இரண்டு, மூன்று உபமாவட்டங்களைக் கொண்ட பல் மாவட்டமாகி இன்று ஆறு உப மாவட்டங்களைக் கொண்ட பல் மாவட்டமாக வளர்ந்து நிற்கிறது.

எமது சர்வதேசத் தலைவரின் மகுடவாசம் மாற்றங்களுக்கான சவால்(Challence to Change) என்பதாகும். அவரின் ஒன்பது அம்சத் திட்டங்கள் அடுத்த ஒரு தசாப்தத்தில் கழக வளர்ச்சியை அதனூடாக சிறந்த தலைவர்களை உருவாக்கி மக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க சீர்மையான திட்டங்களை உள்ளடக்கியுள்ளன.

### பார்வைக்கு முதலிடம்

1925 ஆம் ஆண்டு ஹெலன் கெல்லர் அம்மையாரின் வேண்டு தலில் பார்வையிழந்த மக்களின் நல்வாழ்வுக் காக உழைக்க ஆரம்பித்த அரிமாக் கழகம் 1990 ஆம் ஆண்டு பார்வைக்கு முதலிடம் என்னும் பாரிய கட்புலன் பேணும் நலத்திட்டத்தை முன் னெடுத்தது. 2005ஆம் ஆண்டு முதல் பார்வைக்கு முதலிடம் 2 எனும் உரமூட்டப்பட்ட் திட்டத்தின் மூலம் கட்புல வலுவிழந்தோர் மறுவாழ்வுக்கும், கட்புல வலு விழத்தலை குறைப்பதற்கும் பல்வேறு பட்ட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

LCIF என்னும் சர்வதேச அரிமாக் கழக நிதியத்தின் மூலம் பல மில்லியன் ரூபா உதவிகள் யாழ்.வைத்திய சாலை கண் சிகிச்சை பிரிவிற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. இருதயச் சிகிச்சைப் பிரிவின் உருவாக்கத்திலும் அரிமாக்களின் பங்கு இன்றியமையாதது.

எமது உப மாவட்டம் 306B 1இன் ஆளுநர் லயன் செல்வரத்தினம் ராகவன் MJF அவர்கள் எமது மண்ணின் மைந்தன். யாழ். இந்து அன்னையின் புதல்வர். பொன்விழா ஆண்டில் உபமாவட்டத்தின் தலைமையை எம்மில் ஒருவர் பெற்றிருப்பது எமக் கெல்லாம் பெருமையாகும். அவரின் ஐந்து அம்ச திட்டங்கள்

* பார்வைக்கு முதலிடம்
* நீரிழிவு விழிப்புணர்வு மற்றும் நீரிழிவு கட்டுப்பாடு.
* இளையோர் நலவாழ்வு மற்றும் இளையோர் அபிவிருத்தி
* தலைமைத்துவ அபிவிருத்தி
* கழகங்களின் ஆரோக்கிய மேம்பாடு என்பனவாகும்

இந்த நலத்திட்டங்களின் பயனாக கழகங்களூடாக எமது மக்கள் குறிப்பாக உதவிதேவைப்படும் நலிந்த மக்கள் நலம்பெறுவர் என்பதில் சந்தேகமில்லை.

சர்வதேச அரிமாக் கழகங்களின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் இம்மாத முற் பகுதியில் கொழும்பில் கொண்டாடப்பட்டன. ஆனால் காலச்சூழ்நிலையால் அந்த வைபவங்களில் கலந்து கொள்ள வியலாத யாழ்.மாவட்ட அரிமாக்கள் இன்று யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்திலே பொன் விழாவை விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

- லயன் Dr வை.யோகேஸ்வரன்.

# செய்தியாளரை விடுவித்தால் நாட்டில் கலவரம் வெடிக்கும் என்கிறது சி.ஐ.டி.

## தவறாக வழி நடத்த வேண்டாமென நீதிமன்றம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 28

'த சண்டே லீடர்' செய்தியாளர் ஆதர் வாமணனைப் பிணையில் செல்ல அனுமதித்தால் நாட்டில் பெரும் கலவரம் வெடிக்கும்; நாட்டு மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்படும். - என்று குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்தை நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

ஆதர் வாமணன் வெள்ளியன்று கல்கிசை பிரதம நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கக்கூடாது எனக் குறிப்பிட்டு வாதாடிய சமயம், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இப்படித் தெரிவித்தனர்.

ஆதர் வாமணன் ஒரு தமிழர் என்பதையும் கவனத்தில் கொள்ளுமாறும், அதன் அடிப்படையிலும் அவருக்கு பிணை வழங்குவதை மறுக்கும் படியும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கோரப்பட்டது.

ஆதர் வாமணன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நளின் லத்துஹெட்டி இதை ஆட்சேபித்தார்.

''அமைச்சர் ஒருவர், தமது மனைவியின் கைத்தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்துமாறு அரச அதிகார சபை ஒன்றைப் பணித்திருக்கின்றார். அது குறித்த செய்தியை வெளியிட முன்னர் சம்பந்தப்பட்ட அமைச்சர் தரப்பின் கருத் தையும் செவிமடுக்க செய்தியாளர் ஆதர் வாமணன் முயற்சித்திருக்கின்றார்.இதைச் சட்ட விரோத செயலாகத் திரிக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் என்ற காரணத்துக்காக வாமணனைப் பிணையில் விடவேண்டாம் என்று இங்கு கோரப்படுவது குறித்து நாம் வெட்கப்பட வேண்டும்.'' - என்றார் வாமணனின் சட்டத்தரணி.

### ஊடகவியலாளருக்கு உண்மைகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் உண்டு

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த பிரதம நீதிவான் அயேஷா ஜயசேன, விளக்கமறியலில் வைக்கப் பட் டிருந்த வாமணனை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

''நியாயமான காரணம் எதுவும் இல்லாமல் - தொலைபேசியில் கூறப்பட்டவை எனத் தெரிவிக்கப்படும் ஒரு விடயம் பற்றிய வெறும் முறைப்பாட்டை மட்டும் வைத்துக்கொண்டு - இவரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிடுவது நியாயமற்ற செயல். அப்படி உத்தரவிட்டால் அது தவறான முன்னு தாரணத்துக்கும் வழி வகுத்துவிடும்.

''இந்த நீதிமன்றத்தைத் தவறான வழியில் திசை திருப்பி, வழி நடத்த முற்படவேண்டாம் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நான் கடுமையாக எச்சரிக்கின்றேன்.

''ஊழல்கள், மோசடிகள் குறித்து சுயாதீனமாக விசாரித்து, நேரடியாகச் செய்தி சேகரித்து, உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்தும் முழு சுதந்திரமும் ஊடகவியலாளர்களுக்கு உண்டு. அதற்கு தடை விதிக்கவோ, ஊறு விளைவிக்கவோ இடமளிக்க முடியாது.'' - என்றும் நீதிவான் குறிப்பிட்டார். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 12 | திங்கட்கிழமை 29.10.2007 |
| திதி : சதுர்த்தி | பிற்பகல்: 02.05 |
| நட்சத்திரம் : | ரோகிணி பிற்பகல் : 03.08 |
| சுபநேரம் | : 12.03 - 01.38 |
| ராகுகாலம் | : 07.33 - 09.03 |

# தடையை நீக்கக் கோரி நீதிமன்றில் மனு

கொழும்பு,ஒக்.28

ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கான அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்து ஊடகத்துறை அமைச்சு விடுத்த பணிப்புரையை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடக்கோரி அந்த நிறுவனம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுச் செய்தது.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சின் செயலாளர் ஜி.திஸாநாயக்கா, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் காஞ்சன ரத்வத்த ஆகிய தரப்புகள் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் - அனேகமாக அடுத்த செவ்வாய்க்கிழமை - நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மாநாட்டின் போது இலங்கைக்கு வான் பாதுகாப்பு ஆயுதங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனக்கு ஆயுத உதவிகளை வழங்கு மாறு இலங்கை பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளது. அது குறித்து நாம் இப்போது ஆராய்ந்து வருகிறோம்

அந்த நாட்டின் இப்போதைய 'கொந்தளிப்பான' நிலைமையைக் கருத்தில் கொண்டு வான் பாதுகாப்பு ஆயுதங்களை வழங்கியுள்ளோம் -

மேலும் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு எமது நாட்டில் பயிற்சிகளையும் வழங்குகிறோம் - என்றும் இந்தியவின் புதிய இராணுவத் தளபதி கூறினார்.

அநுராதபுரம் விமானத் தளத் தாக்குதல் நடைபெற்ற பின்னணியில் - ஐந்தாவது நாளில் இந்திய இராணுவத் தளபதி இவற் றைத் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை-

அநுராதபுரம் விமானப் படைத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இழக்கப்பட்ட வான்கலன்களுக்குப் பதிலாக புதியனவற்றை கொள்வனவு செய்வதற்கு கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புச் சபையின் வாராந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமைவகித்தார். விமானப் படைத்தளபதி சமர்ப் பித்த தேவைக்கு முன்னுரிமை அடிப்படையில் வான்கலங்களை கொள்வனவு செய்யுமாறு பாதுகாப்புச் சபையினர் பாதுகாப்பு சபையை ஜனாதிபதி பணித்திருந்தார்.

அத்தோடு-

அநுராதபுரத் தாக்குதலில் அழிக்கப்பட்ட வான்கலன்களுக்கு பதிலாக புதியன நட்பு நாடுகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட விருப்பதாகவும் -

அவை நட்பு நாடுகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும். சம்பந்தப்பட்ட நாடுகளுடன் நாம் தொடர்பு கொண்டுள்ளோம். சில காரணத்தால் அந்த நாடுகள் என்ன என்பதையும் கூறமுடியாது என்று ஜனாதிபதி யின் சகோதரரும் நாடாளுமன்ற உறுப்பினமான பசில் ராஜபக்ஷ கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு அவரளித்த

## விமானத் தள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தளம் மீதான தாக்குதலில் 20 விமானங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் இதன் மூலம் 6 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும்அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-1)

## புதிய நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

22ஆம் திகதிக்குரிய வழக்குகள் நவம்பர் 11 ஆம் திகதிக்கும் -

23ஆம் திகதிக் குரிய வழக்குகள் நவம்பர் 13 ஆம் திகதிக்கும் -

24ஆம் திகதிக்குரிய வழக்குகள் நவம்பர் 14 திகதிக்கும் -

26 ஆம் திகதிக்குரிய வழக்குகள் நவம்பர் 16ஆம் திகதிக்கும் - ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ்.நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்தார்.(அ-1)

## இந்திய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் இந்திய ராடர்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் எந்த விமானத்தாலும் விடுதலைப் புலிகளின் இலகு ரக விமானங்களை இடைமறித்துத் தாக்கமுடியாமற்போனது குறித்து விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்திய ராடர்கள் உரிய முறையில் செயற்பட்டு எச்சரிக்கை ஒலி எழுப்பியதை விமானப்படைத் தளபதி றொஷான் குணதிலகவும் ஊர்ஜிதம் செய்துள்ளார்.

விமானப் படைத் தளத்தில் இருந்த விமா னங்கள் விடுதலைப் புலிகள் நடத்திய தரை வழித் தாக்குதல் கரணமாகவே அழிந் தன. அவர்கள் நடத்திய விமானத் தாக்குதலால் அல்ல - என்றும் றொஷான் மேலும் சொன்னார்.(அ)

## நீராவியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுனதினம் இரவு 10 மணிக்கு ஆரம்பமான கொள்ளையர்களின் கைவரிசை அதிகாலை வரை நீடித்ததாக அப்பகுதி மக் கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் யாழ். அன்னசத்திர ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடொன்றின் வாசற்கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுளைந்த கொள்ளைக் கோஷ்டி அந்த வீட்டில் இருந் தவர்களை ஆயுத முனையில் மிரட்டி பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுள்ளனர்.

பின்னர் அருகில் இருந்த நான்கு வீடுகளுக்குள் வாசற்கதவுகளை உடைத்தும் கூரையைப் பிரித்தும் உள் நுழைந்த கொள்ளைக்காரர்கள் அங்கும் பணம், நகை, கையடக்கத் தொலைபேசி ஆகியன உட்படப் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டனர்.

### தாலிக்கொடியை வெட்டி எடுத்தனர்

ஒரு வீட்டில் இருந்த பெண்ணிடம் இருந்து தாலிக்கொடியை வெட்டி எடுத்த கொள்ளையர்கள் அதிலிருந்த தாலியைக் கழற்றி பெண்ணிடம் கொடுத்துவிட்டு கொடியை கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இன்னொரு வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக்காரர்கள் அங்கும் பணம் நகை என்பவற்றை கொள்ளையிட்டு சென்றனர். அங்கு பல லட்சம் ரூபாக்கு அதிகமான பணம், நகைகள், பொருள்கள் என்பன கொள்ளையிடப்பட்டதாக கூறப்படுகிறது.

கொள்ளைக் கோஷ்டியில் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் இருந்ததாகவும், வாகனம் ஒன்றில் கூரிய ஆயுதங்கள் சகிதம் வந்தவர்கள் தமது முகங்களைக் கறுப்புத் துணிகளால் கட்டியிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### காரும் சூறை

கந்தர்மடம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நள்ளிரவு சுமார் 12 மணிக்கு கதவை உடைத்துக் கொண்டு சென்ற கொள்ளைக் கோஷ்டி அங்கிருந்த தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் பெறுமதியான உபகரணங்களை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தியது.

அதன் பின்னர் வீட்டிலிருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்து விட்டு, வீட்டுக்காரரை வாள் மற்றும் ஆயுதங்களால் தாக்க முயன்றதாக தெரிவிக்கப்பட்டது.

அவர் மதில் ஏறிப் பாய்ந்து தப்பிய போது காயத்துக்கு ஆளானார். இறுதியில் வீட்டில் நின்ற காரையும் கொள்ளையர்கள் சூறையாடிச் சென்றனர்.

சூறையாடப்பட்ட கார் யாழ்.நீராவியடிக் குளத்துக்குச் சமீபமாக கைவிடப்பட்ட நிலை யில் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளான நிலையில் காணப்பட்டது.

இலக்கத் தகடுகள் அற்ற நிலையிலேயே அந்தக் கார் காணப்பட்டது என்றும் அதற்கு அருகில் கறுப்பு நிறத்துணிகள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ-50-111-15-78)

## மருமாதா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. இராணுவத்தின் கட் டுப்பாட்டில் உள்ள அந்த மாவட்டத்தின் தென்பகுதியிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான அந்த மாவட் டத்தின் வட பகுதியிலும் போர்ச்சூழல் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்கள் என்று ஆயர் இராயப்பு யோசப் எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடம் பெயந்த மக்களின் பாதுகாப்பு பாதிக்கப்பட் டுள்ளதாகவும், அண்மையில் பெரியமடு பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் இருக்கும் பகுதி மீது நடத்தப்பட்ட எறிகணை தாக்கு தலில் 3 பேர் கொல்லப்பட்டு 8 பேர் காய மடைந்துள்ளதனால் அந்த மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யவதற்காக மடுக் கோவில் பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தவதற்கு எழுத்து மூலமான உத்தரவாதம் ஆயர் மன்றத்துக்கு வழங்க வேண்டும் என சந்திப்பின் போது கோரியுள்ளதாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் கூறினார்.

CB Computer Academy
புதிய பிரிவுகள் ஆரம்பம்!!
Station Road, Kondavil. 021-4590291
29.10.07 (Mon)
Dip. in Computer Aided Design [AutoCAD]
Dip. in Programming Languages
Dip. in DTP & Graphics Design
முழுமையான கல்விக்கு முதல் நாளே இணையுங்கள்!!

இன்று விற்பனைக்கு வருகிறது
சுடர் ஒளி
THE SUDAR OLI
ஒக் 21 - 27 இதழ்
★ சமஷ்டி: முன்பு முயற்சித்துப் பார்த்தது பின்பு கைவிடப்பட்ட விவகாரம்
★ பேச்சு என்றால் யாருடன் ?
★ அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கினார் சோனியா!
★ பூட்டிய கதவுகளினூடாகக் கைநீட்டிக் கதறி அழுதார்கள் யாழ்ப்பாண மக்கள்
★ நேபாளத்தின் புரிந்துணர்வு இலங்கையிலும் ஏற்படுமா?
★ மியாமி கரைதனில் சிதறிய சடலங்கள் (தொடர் கதை)
மற்றும் வழமையான சுவையான அம்சங்களுடன்....
உதயன் முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்!
இன்று விற்பனைக்கு வருகிறது

துரித தபால்கள் பொதிகள் சேவை
தீபாவளியை முன்னிட்டு மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு
10% - 20% வரையான விசேட விலைக் கழிவு
FedEx Express
லண்டனுக்கு அனுப்பப்படும் 5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் விசேட சலுகை 1 Kg.900/=
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

FEELS LIKE HEAVEN
Clearing Price Offer
DDR1 256 Kingston 2950/-, DDR2 256 1950/-
DDR1 512 4100/- DDR2 512 Kingston 3100/-
Power Tree UPS
ATX/LGA Power Supply
HP Deskjet Printers
HP All in one Printers (Printer, Photocopy & Scanner)
HP LaserJet Printers,
Canon LaserShot Printers
Canon Lide 25 Scanner
Genius Laptop Scanner
Wireless pointers
Games Devices
Wifi adapters
Mouse pen
Internet phone
DVD Multiplayer
Intel Pentium 3.0/2m or Dual Core 3.0/4M or Core 2 Duo Processor, Intel Original or AsRock or Asus P5 Mother Boards, 512mb / 1 Gb Memory, 80/160Gb HDD, DVD-RW, 15" CRT/LCD Monitor, Power Tree UPS, Keyboard, Mouse & Speaker
All type of mother boards, Processors, Hard disks, Memories, VGA Cards, Sound Cards, Network Items and etc includes in this OFFER
UNIT மனோகரா சந்தி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737

IBS கல்வி நிலையம்
தரம் 5 விசேட புலமைப் பரிசில் வகுப்பு புதிய பிரிவு ஆரம்பம்
31.10.2007-3pm
மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
ஆசிரியர்:- ந.சபேசன்

மீண்டும் விடுதலைப் பெருவிழா
இடம்: ஆவரங்கால் சந்தி
காலம்: ஐப்பசி 26, 27, 28ஆம் திகதிகளில்
நேரம்: தினமும் பிற்பகல் 3 மணிக்கு
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின் பிடி, பில்லி சூனியக் கட்டுக்கள், பரம்பரைச் சாபங்கள் ஆகியவற்றிலிருந்து இயேசு விடுதலை கொடுக்கிறார்.
குறிப்பு: 27ஆம், 28ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) அன்பான இயேசு ஜீவ கீதங்கள் பாடிய சுவிசேஷகரும் பாடகருமான சகோ. N.பத்மதேவா அவர்களின் ஜீவகீத நிகழ்வும் இடம்பெறும்.
கடந்த மாதங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாவில் அனேக மக்கள் அற்புத விடுதலையடைந்தார்கள்.
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, அச்சுவேலி.
T.P.: 021 222 6730
(67312)

சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் (306) பொன்விழா நிகழ்வு
காலம்: 28.10.2007; நேரம்: காலை 10 மணி; இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
பிரதமவிருந்தினர்:- ஆளுநர் மேதகு லயன் செ.ராகவன் MJF,JP அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
"சேவை தெய்வீகமானது" லயன்ஸ் கழகங்கள். (சி-53382) SERVICE IS DIVINE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.